# களத்தில்

எதிரி உந்தன் கதவிலே
எழுக வீரப்புலிகளாய்!
உதிரியாயின் கதையிலே
தானிருக்கும் சரித்திரம்.

திருவள்ளுவர் ஆண்டு 2026 துலாம் 01 (18.10.1995) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வருஞ் செய்தித் தாள் 40p


# மக்கள் உணவின்றித் தவிப்பு சிறீலங்கா வழங்க மறுப்பு

## உலக நாடுகளின் உதவி உடன் தேவை

**யாழ் குடாநாட்டில் என்றுமில்லாத அளவுக்குக் கடும் உணவுப் பஞ்சம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன.**

**சிறீலங்கா அரசாங்கம், சர்வதேச யுத்தவிதிகளுக்கு முரணான வகையில், உணவை ஆயுதமாக்கி, குடாநாட்டுக்கான உணவு விநியோகத்தைச் சீர்குலைத்துள்ளது.**

யாழ் குடாநாட்டுக்கான உணவுக் கையிருப்பு படிப்படியாகக் குறைந்து வந்து தற்பொழுது முற்றாகத் தீர்ந்துள்ளநிலையில் கடைசியாகக் கையிருப்பில் இருந்த 40 மெட்ரிக் தொன் மாவும் 'இடிமுழக்கம்' என்ற இராணுவ ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்டு தென்மராட்சிக்கு இடம் பெயர்ந்த மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

யாழ் செயலக அதிகாரிகளின் கருத்துப்படி 60,000 மெட்ரிக் தொன் மா யாழ் குடாநாட்டு மக்களின் பயன்பாட்டுக்கு ஆண்டு ஒன்றுக்குத் தேவையாக உள்ள போதிலும் இதில் அரைப்பங்கிற்கும் சற்று அதிகமான அளவு மட்டுமே இவ்வாண்டு சிறீலங்கா அரசாங்கத்தால் விநியோகிக்கப்பட்டது எனத் தெரியவந்துள்ளது. யாழ் செயலக அதிகாரி திரு. கே. பத்மநாதன் உணவுக்கான அவசர வேண்டுகோள் ஒன்றினை கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ளார். '1990ம்' ஆண்டுக்குப் பின்னர் மிகப் பெரிய உணவு நெருக்கடி ஒன்று ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள அவர், 10-10-95 உடன் உணவுத் தயாரிப்புக்குத் தேவையான மாவின் கையிருப்பு முடிவடைந்துவிட்டதாகவும் கடந்த ஆடி 15ம் திகதியே இறுதியாக இடம் பெயர்ந்த 56,600 குடும்பங்களுக்கான அவசர உணவு விநியோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் 'முன்னோக்கிப்பாய்தல்' இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் ஒரு வார காலத்திற்குப் போதுமான

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்



முல்லைக்கடலில் தாக்கப்பட்டு எரிந்தநிலையில் இழுத்துவரப்படும் டோறா படகு

## சிறீலங்கா இராணுவத் தாக்குதலால் 9 முதியோர் பலி

### முதியோர் இல்லத்தில் பரிதாப சம்பவம்

சிறீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவம், 'இடிமுழக்கம்' இராணுவ நடவடிக்கை மூலம் ஆக்கிரமித்துள்ள பகுதியிலே ஒன்பது முதியவர்கள் மரணமடைந்துள்ளனர். இவர்களது வயோதிப மடம் விடுதலைப்புலிகளின் மோட்டார் தாக்குதலுக்கு உள்ளானதாக அப்பட்டமான உண்மைக்கு மாறான செய்தியைச் சிறீலங்கா ஊடகங்கள் பரப்பின. இதனைக் குறித்து விடுதலைப்புலிகள் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கூறப்பட்ட இந்தப் பகுதிகளில் எத்தகைய தாக்குதலையும் விடுதலைப்புலிகள் மேற்கொள்ளவில்லை எனவும், அத்தகைய ஒரு சம்பவத்திற்கு விடுதலைப்புலிகள் எவ்வகையிலும் தொடர்புபடவில்லை எனவும், அப்படி ஒன்பது முதியவர்கள் மரணித்து இருப்பின் அதற்கான முழுப்பொறுப்பையும் சிறீலங்கா இராணுவமே ஏற்றுக்கொண்டாக வேண்டும் எனவும் கூறியுள்ளனர்.

## மட்டக்களப்பில் அதிரடித் தாக்குதல்

- 9 பேர் பலி
- 6 பேர் படுகாயம்

### பவல் கவசவாகனம் அழிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் 9.10.1995 அன்று காலை, சிறீலங்கா விசேட அதிரடிப்படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 9 அதிரடிப்படையினர் கொல்லப்பட்டு 6 பேர் படுகாயம் அடைந்தனர். இத்தாக்குதலின் போது அதிரடிப்படையினரிடமிருந்து நவீன ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர். இத்தாக்குதலின்போது 3 போராளிகள் வீரச்சாவடைந்தனர். மேலும் இத்தாக்குதல் நடைபெற்ற இடத்திலிருந்து அண்மையில் உள்ள அதிரடிப்படை முகாமிலிருந்து உதவிக்கு வந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய துணிகரத் தாக்குதலின் போது

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

## ஐப்பசி முடிவுக்குள் அடுத்த போர்

சிறீலங்காவின் சமாதான தேவதையாகத் தன்னை வெளிப்படுத்திய சந்திரிகா பண்டாரநாயக்க, இரகசியமாக ஜேஆர் பாணியில் காலக்கெடு விதித்தே தனது இராணுவத்தைத் தமிழ் மக்கள் மீது போர் தொடுக்க அனுமதித்ததாகத் தெரிகிறது.

ஐப்பசி முடிவுக்குள் - மழைக் காலம் ஆரம்பமாவதற்கு முன்னர், விடுதலைப்புலிகளை யாழ் குடாநாட்டிலிருந்து காட்டுக்குள் துரத்த வேண்டும் என்ற உறுதிமொழியைப் பெற்றே, சந்திரிகா அம்மையார் இராணுவவாதிகளுக்குப் போர் தொடுக்க அனுமதித்ததாகவும், அவ்விதம் அவர்கள் செய்துவிட்டால் பின்னர் தமிழ் மக்களுக்குத் தீர்வு இதுதானென அரசியல் தீர்வொன்றைத் திணிக்கலாம் என்பதே சந்திரிகாவின் திட்டமாக இருந்ததாம் எனவும்

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

## ஐ.நா. சபைக்கு யாழ்.பிரசைகள் குழு கடிதம்

யாழ்ப்பாணப் பிரசைகள் குழு, ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் நாயகம் பூட்ரஸ்பூட்ரஸ் காலிக்கு எழுதிய கடிதத்தில் தமிழ் மக்கள் சார்பில், ஐநா சபை தலையிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது.

சிறீலங்கா அரசு செய்துவருகின்ற

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# யாழ் குடா நாடு மீது மீண்டும் சிறீலங்கா ஆரம்பித்துள்ள போர்

## தமிழீழமெங்கும் புலிகள் வீரமிகு தாக்குதல்கள்

**பிந்திய விசேட செய்திகள்**

**யாழ் குடாநாட்டில் பாரிய போர் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மாதகலில் இருந்து சிறீலங்கா இராணுவம் முன்னேற முயன்ற முயற்சி விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது**

மாதகல் பகுதியில் இருந்து சிறீலங்கா இராணுவம் 15.10.95 ஞாயிறன்று முன்னேற எடுத்த முயற்சி விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது. பலாலி, காங்கேசன்துறை, மாதகல் ஆகிய முகாம்களில் இருந்து அகோர எறிகணைத் தாக்குதலை நடாத்தியவாறு டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் இராணுவத்தினர் முன்னேற முயன்ற வேளை, கடற்படைக் கப்பல்களும், இராணுவத்திற்கு உதவியாக பீரங்கித் தாக்குதலை அப்பகுதியில் மேற்கொண்டதாகத் தெரிகின்றது. பெரும் பீரங்கித் தாக்குதல்களின் மத்தியிலும் விடுதலைப் புலிகள் நடத்திய எதிர் தாக்குதலில் இராணுவதரப்பில் பெரும் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இராணுவத்தின் இவ் முன்னேற முயற்சியின் போது வலிகாமம் மேற்குப் பகுதியில், இராணுவத்தினர் நடத்திய அகோர எறி- கணைத் தாக்குதல்களால், அப்பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர். சுழிபுரம், குடத்தனை, இறாத்தலடி, பறாளை, நெல்லியான், பண்ணாகம், மூளாய், பொன்னாலை, தொல்புரம், சித்தங்கேணி, வட்டுக்கோட்டை, சங்கானை ஆகிய பகுதிகளில் இருந்த மக்களே தமது வதிவிடங்களை விட்டு அகப்பட்ட பொருட்களுடன் மக்கள் அல்லோகல்லோலப்பட்டு இடம்பெயர்ந்தனர். இம் மக்கள் வடக்கம்பரை அம்மன் கோயில், மூளாய் பிள்ளையார் கோயில், தொல்புரம் பிள்ளையார் கோயில் மற்றும் சங்கரத்தை, வட்டுக்கோட்டை, நவாலி ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகள், ஆலயங்களில் தங்கியுள்ளனர். பெருமளவு மக்கள் யாழ் நகரை நோக்கியும் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். இருபாலையில் இரவில் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலால், மக்கள் இரவோடிரவாக இடம்பெயர்ந்துள்ளனர். வலிமேற்குப் பகுதியில், ஞாயிறு காலை, இராணுவம் நடத்திய எறிகணைத் தாக்குதலில், 63 வயதுடைய சுழிபுரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் இராசதுரை என்பவர் மரணமடைந்தார்.

### இரண்டாவது நாளாக தொடர்ந்தும் பெரும் மோதல்

வலிகாமம் தென்மேற்குப் பகுதிகளை நோக்கி 16.10.95 திங்கட்கிழமை இரண்டாவது நாளாக மாதகலில் இருந்து இராணுவம் முன்னேற தொடர்ந்து முயற்சி செய்வதால் பாரிய போர் ஒன்று தற்பொழுது நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. பலாலி, காங்கேசன்துறை, மாதகல் ஆகிய பகுதிகளில் காணப்படும் டாங்கிக- ளில் இருந்தும் அகோர எறி- கணை வீச்சும் பலத்த பீரங்கித் தாக்குதலும் நேற்று முற்பகல் 11.30 மணியில் இருந்து நடாத்தப்பட்டுள்ளது. இதில் பல கட்டடங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. பெரும் தொகையான எறி- கணைகள் இத்தாக்குதலின் போது ஏவப்பட்டன. மாதகல் இராணுவ நிலைகளில் இருந்து தம்பில் துறைப் பக்கமாக . டாங்கிகள் சகிதம் வெளியேறிய படைகள் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலின் போது பாடசாலை மாணவன் ஒருவன் கொல்லப்பட்டான். சுழிபுரம் கிழக்கு கண்ணகி அம்மன் கோயிலடி வீதியில் வீழ்ந்து வெடித்த எறிகணையால் வீரபத்திர கோயிலடியைச் சேர்ந்த விக்டோரியாக் கல்லூரி மாணவன் சிவபாதம் கணேஸ்வரன் என்ற 14 வயதுடைய மாணவன் அவ்விடத்திலேயே உடல் சிதறிப் பலியானார். இப்பகுதியில் இரண்டு நாட்களுக்கு முன் சிறீலங்கா இராணுவத்தினரின் அகோர எறி- கணை வீச்சால் அல்லோலகல்லோலப்பட்டு வெளியேறிய மக்கள் அன்று மாலையே மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு திரும்பினர். எனினும் நேற்றுக் காலையில் மீண்டும் இப்பகுதியை நோக்கி எறிகணைத் தாக்குதலைத் தொடங்கியதையடுத்து திரும்பிச் சென்ற மக்கள் மீண்டும் வெளியேற வேண்டி வந்தது.

### வலிகிழக்கிலும் பெரும் மோதல

வலிகிழக்குப் பகுதியில் புத்தூர், நவக்கிரி கிராமங்களில் விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் பெரும் மோதலொன்று நடை- பெற்றுக் கொண்டிருக்கின்றது. நிலாவரைப் பகுதியில் நடந்து கொண்டிருக்கும் சண்டையில் 1 டாங்கி உட்பட 2 கவச வாகனங்கள் விடுதலைப் புலிகளால் முற்றாக தாக்கியழிக்கப்பட்டன. இராணுவம் பெரும் இழப்பைச் சந்தித்துள்ளது. சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு தமது தரப்பில் 11 பேர் கொல்லப்பட்டு, 150 ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகவும் கூறியபோதிலும், இராணுவத் தரப்பு இழப்புக்கள் இன்னும் அதிகமாக இருக்கும் என நம்பப்படுகிறது. இம் மோதலில் எமது தரப்பில் 30 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். இது பற்றிய மேலதிக விபரம் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கப் பெறவில்லை.

### யாழ் நகர வீதியெங்கும் அகதிகள்

யாழ் நகரெங்கும் அகதிகளின் அல்லோலகல்லோலத்தையும் அவல நிலையையும் காணக்கூடியதாய் உள்ளது. வீதிகள் தோறும் அகதிகளினால் நிரம்பி வழிந்த வண்ணம் இருக்கின்றது.

## மட்டக்களப்பு பூமாஞ்சோலையில் புலிகள் அதிரடித் தாக்குதல்

### 32 அதிரடிப்படையினர் பலி
### 16 போராளிகள் வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டத்தில், செங்கலடி இராணுவ முகாமில் இருந்து 6 கவச வாகனங்கள் சகிதம் புறப்பட்ட 500 க்கும் அதிகமான சிறீலங்காவின் விசேட அதிரடிப்படையினர் அணிகள் மீது பூமாஞ்சோலை எனும் இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதலை மேற்கொண்டனர்.விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கரடியன் ஆறு நோக்கி, செங்கலடி இராணுவ முகாமில் இருந்து கவசவாகனங்கள் சகிதம் புறப்பட்ட 500 க்கும் அதிகமான விசேட அதிரடிப்படையினர் மீதே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்துணிகரத் தாக்குதலில் அதிரடிப்படையைச் சேர்ந்த 32 பேர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டதுடன் இதில் 16 பேரின் உடல்கள் விடுதலைப் புலிகளால் எடுக்கப்பட்டுள்ளது. பெரும்தொகையான ஆயுதங்களும், ரவைகளும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.இத்தாக்குதலின் போது தப்பியோடிய படையி- னர் மீது விடுதலைப் புலிகள் செங்கலடி கறுத்த பாலம் வரை துரத்திச் சென்று தாக்கினர். இத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் 16 போராளிகள் வீரச்சாவடைந்தனர். தாயக மண் மீட்புக்காய் களமாடி வீரமரணமடைந்த இவ் மாவீரர்களுக்கு, விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைச் செலுத்துகின்றனர். இத் தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் விபரம்

ஈ.பி எம். ஜி 1, ஏ.கே. எல்.எம்.ஜி 2, பி.கே. எல்.எம்.ஜி 1, 38 டொங்கான் 1, 40 எம். எம். டொங்கான் 2, ஏ.கே துப்பாக்கி 18, பி.கே. ட்ரம் மகசின் 1, கிளைமோர் 4, ஏ.கே. எல்.எம்.ஜி ட்ரம் மகசின் 2, 60 எம். எம். எறிகணை 6, நேட்டோ ரவை லிங்குடன் 28, கைக்குண்டுகள் 11, ஏ.கே மகசின் 54, பரா வெளிச்சக் குண்டு 2, 40 எம். எம். எறிகணை 11, பி.கே. எல்.எம்.ஜி லிங்குடன் ரவை 500, ஏ.கே லிங் மட்டும் 700, கிளைமோர் வெடிக்க வைக்கும் கருவி 4, ஏ.கே. எல்.எம்.ஜி லிங்குடன் ரவை 925, ஐ.எம். ரவை 1625, 'பீல்ட்' பைக் மோட்டார் வண்டி 6

## திருமலைத் துறைமுகத்துள் மீண்டும் விநியோகக் கப்பல் தாக்கியழிப்பு

திருமலைத் துறைமுகத்துக்குள் வைத்து சிறீலங்காக் கடற்படைக்குச் சொந்தமான விநியோகக் கப்பல் ஒன்று 16.10.95 செவ்வாய்க்கிழமையன்று விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பல் கடற்படையினரின் பீரங்கிப் படகுகளும், கடற்படையினராலும் பலத்த பாதுகாப்புடன் கண்காணிப்புக்கு உட்பட்ட பகுதியில் தரித்து நின்ற வேளையிலேயே துறைமுகத்துக்குள் ஊடுருவிய விடுதலைப் புலிகளாலேயே இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. இத்தாக்குதலின் போது கப்பல் முற்றாகச் சிதைக்கப்பட்டதுடன் இதில் இருந்த 10 கடற்படையினரும் கொல்லப்பட்டுள்ளனர் என ஏ.பி செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

சிறீலங்கா இராணுவப் பேச்சாளர், இத்தாக்குதல் நீரடிக்கு கீழே இருந்துதான் குண்டை வெடிக்க வைத்து கப்பல் தகர்க்கப்பட்டிருக்கிறது என்றும் இதில் 9 ஆகக் குறைந்தது 9 கடற்படையினரும் மேலும் 9 பேர் படுகாயமடைந்ததாகவும் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறுகையில், கப்பல் மூழ்கடிக்கப்பட்டு விட்டதா, அல்லது நீரின் மேல் தான் உள்ளதா என்று தனக்கு இன்னும் அறியமுடியவில்லை என்று கூறினார்.

500 தொன் எடையுள்ள இக்கப்பல், வடபகுதியிலுள்ள படையினருக்கு உணவுப்பொருட்களையும் ஆயுதங்களையும் வழங்கிவந்தது. இக்கப்பல் யப்பானால் மீன்பிடிக்கப்பலாக கொடுக்கப்பட்டு பின்னர் இது சிறீலங்கா அரசால் சிறீலங்காக் கடற்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டது

## எட்டு இலட்சம் பொதுமக்களை பாதுகாருங்கள் சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

யாழ்ப்பாண குடாநாட்டிற்கான எட்டுஇலட்சம் பொதுமக்களையும் பாதுகாக்குமாறு சிறீலங்கா அரசை சர்வதேச மன்னிப்புச்சபை கோரியுள்ளது. முன்னர் இடம்பெற்ற தாக்குதல்களில் பெருமளவிலான மனித உரிமைகள் மீறப்பட்டது தொடர்பாக வெளியான செய்திக- ளின் அடிப்படையில் பொதுமக்களதும் காயப்பட்டவர்களினதும் உயிர் மற்றும் பாதுகாப்பின் அடிப்படையிலேயே இந்த வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. "பொதுமக்கள் மற்றும் போராட்டத்தில் தீவிரமான பங்கை வகித்து சுகயீனம், காயங்கள் போன்ற காரணங்களால் சண்டையில் ஈடுபடாமல் உள்ளோர் போன்றோர் எழுந்தமானமாகக் கொல்லப்படுவதை தவிர்ப்பதற்காகவாவது பாதுகாப்பு ஏற்பாடுகள் சில அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை கோரியுள்ளது.



# மௌனம் காக்க முடியாது

சர்வதேச இராணுவநிலைகள் பற்றிய ஆய்வு நிறுவனம் (International Institute for strategic studies), தனது இராணுவ ஆய்வில் (ஸவசயவநபைஉ ஸரசஎநல) விடுதலைப்புலிகள் சுயமான அரசாங்கம் ஒன்றுக்கான சகல அம்சங்களையும் கொண்டு செயற்படுவதைச் சுட்டிக் காட்டி சர்வதேச அங்கீகாரம் ஒன்றே பாக்கியாக உள்ளது எனக் கூறியுள்ளதுடன்; இதனைச் சிறீலங்கா அரசு அனுமதிக்காது எனவும் குறிப்புரை விடுத்துள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைமையிலான தமிழீழ மக்களது அரசின் சர்வதேச அங்கீகாரத்தைத் தடுப்பது ஒன்றே சிறீலங்காவின் இன்றைய நடவடிக்கைகளின் மையமாக உள்ளது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினை இல்லா தொழிப்பதன் மூலம்; தமிழ்மக்களின் அரசைச் செயலிழக்கச் செய்யலாம் எனும் நோக்கில் விடுதலைப்புலிகளுடன் போர் தொடுத்த சிறீலங்கா; இன்று அதை நிறைவேற்ற முடியாது எனக் கண்டதும் தமிழ் மக்கள் மீது தனது இனப்படுகொலை வெறியினைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இதன் வெளிப்பாடுகளே; நவாலித் தேவாலய இனப்படுகொலை முதல் நாகர் கோவில் மத்திய மகாவித்தியாலய மாணவர் படுகொலை; இடிமுழக்கம் என்ற இராணுவ நடவடிக்கை வரையான செயற்பாடுகள் ஆகும். அதுமட்டுமல்ல சர்வதேச சட்டங்களுக்கு முரணான வகையில் உணவை ஆயுதமாக்கியும் குடாநாட்டில் உள்ள இலட்சக்கணக்கான மக்களை இன அழிப்புச் செய்ய முயல்கிறது.

எந்த ஒரு விடுதலைப் போராட்டத்திலும் ஆக்கிரமிப்பாளன் தோல்வியைத் தழுவும் நிலைவரும் பொழுது; அப்பாவி மக்களை அழித்தல் எனும் கொடுஞ்செயலில் இறங்குவது வரலாற்று வழமை.

தமிழீழ விடுதலைப் போராட்டமானது பதினேழு ஆண்டுகாலத் தொடர் போராட்டத்தினால் விடுதலை இலக்கினை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதையே சர்வதேச இராணுவ நிலைகள் பற்றிய ஆய்வு தெளிவாக்குகிறது. அந்நிலையில் சிறீலங்கா மிகக் கொடுமையான இன அழிப்பு முயற்சிகள் மூலம்; தமிழ் மக்களை உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி; தனது ஆக்கிரமிப்பு நிலையைப் பேண முயல்கின்றது. இதனால் தமிழீழ மக்கள் மிகக்கடுமையான பாதிப்புக்குள்ளாகி வருவதுடன்; சிறீலங்கா உணவை ஆயுதமாக்கி வதைப்பதனால் உணவு நெருக்கடியினையும் சந்தித்து நிற்கின்றனர்.

முன்னாள் பிரித்தானிய வெளிவிவகாரச் செயலாளர் டக்ளஸ் ஹேர்ட் பிரத்தியேக மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் பொழுது இடம் பெறலாம் எனக் கூறியதை இந்நேரத்தில் நினைவுபடுத்துகிறோம். ஐ. நா. வின் 1992 ம் ஆண்டின் 794 வது தீர்மானம்; மனிதாபிமான தேவைகளை நிறைவேற்றத் தேவையான சூழ்நிலையை உருவாக்க ஏற்புடைய எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படலாம் என்கிறது. இவற்றின் அடிப்படையில் உணவு மருந்து இன்றித் தவிக்கும் தமிழீழ மக்களுக்கு உதவ வேண்டிய கடமை உலகநாடுகளுக்கு உண்டு. ஆகவே இனியும் உள்நாட்டுப் பிரச்சனை என உலகு மௌனம் காக்க முடியாது.

மேலும் அரசியல் விஞ்ஞான அறிஞர் அந்தனி எச். பேர்ச் நவீன சனநாயகத்தின் அடிப்படைகளும் கொள்கைகளும் ( The concepts and theories of modern Democracy ) எனும் நூலில், ஒரு அரசாங்கம் தனது பிரதேசத்தில் உள்ள சாதாரண குடிகளின் அடிப்படை உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தத் தவறும் பொழுது, அப்பிரதேசம் அவ்வரசிலிருந்து விலகித் தனிநாடாகப் பிரிந்து செல்லலாம் என்கிறார்.

இதுதான் தமிழீழப் பிரதேசத்தின் நிலை. ஆகவே விடுதலைப் புலிகளை அங்கீகரித்து, மற்றைய விடுதலை இயக்கங்களுக்குச் சர்வதேசப் பிரதிநிதித்துவ அந்தஸ்த்து வழங்கியது போல்; விடுதலைப்புலிகளுக்கும் சர்வதேச அமைப்புக்களில் பிரதி நிதித்துவ உரிமை வழங்குவதன் மூலமே சிறீலங்காவின் இன அழிப்பு நடவடிக்கைகளிலிருந்து தமிழீழ மக்களின் உயிர்களையும் உடமைகளையும் காப்பாற்றலாம். காப்பாற்றவும் வேண்டும்.

# தமிழர்களிடமிருந்து விடுதலைப் புலிகளை அந்நியப்படுத்துவது என்பது முடியாத காரியம்

*-கலை கலாச்சார அமைப்புக்கள் மகஜர்*

விடுதலைப்புலிகள் பேச்சு வார்த்தைகளுக்கு எதிரானவர்கள் அல்லர், தமிழர்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே வேறுபாட்டை ஏற்படுத்துவது என்பதோ தமிழர்களை விடுதலைப் புலிகளிடமிருந்து அந்நியப்படுத்துவது என்பதோ யதார்த்த பூர்வமானதல்ல.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் கலைஞர்கள், எழுத்தாளர்கள், புலமையாளர்கள் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவிற்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரின் விபரம் வருமாறு,

'யாழ்ப்பாணத்தின் கலைஞர்கள், எழுத்தாளர்கள், புலமையாளர்களாகிய நாம், 22.09.95 அன்று வடமராட்சி நாகர் கோவிலில் நடந்த 40 பாடசாலைக் குழந்தைகள் மரணத்தினால் அதிர்ச்சியடைந்துள்ள நிலையில் அரசியல் தீர்வு பற்றி எவ்விதக் குறிக்கோளுமின்றிப் பல்லாயிரக் கணக்கான தமிழ்மக்கள் மீது பலத்த தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கும் தற்போதைய அரசின் போக்குப் பற்றி எமது துயரத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நாம் இரண்டு மிக அவசரமான விடயங்களை முனைப்புறுத்திக் கூற விரும்புகின்றோம்.

1:- இங்கு வாழ்கின்ற தமிழர்கள் ஒவ்வொருவரையும் எறிகணையாலும் குண்டாலும் பயமுறுத்துகின்ற தற்போதைய இராணுவ நடவடிக்கைகளின் அழிவேற்படுத்தும் தன்மை.

2:- வடக்குகிழக்கு தமிழர்களுடனும் அவர்களின் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் விடுதலைப் புலிகளுடனும் கலந்து பேசாது தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காணும் சாத்தியம் இல்லாமை. 'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கை எத்தனை துயரமான அழிவை ஏற்படுத் தியது என்பது இன்று பலர் அறிந்த உண்மை. 205 பேர் மரணமுற்று, 953 பேர் காயப்பட்டுள்ளனர். 1 87 589 மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

வரையறுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை எனப்பட்ட 'ட்ராகன் பயர்' காரணமாக 15 பேர் உயிரிழந்தனர். 7146 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இப்போது இவை போதாது என்று வடமராட்சியில் பள்ளிக் குழந்தைகள் பதைபதைக்கப் கொல்லப்பட்டுள்ளனர்.

இது கொடுமை மிக்க ஓர் அழிவு. வடமராட்சி குண்டுவீச்சில் 3000 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளனர். எறிகணைத் தாக்குதல், மிக்க கொடூரமான கொலைச் சக்தியாயுள்ளது. சற்றும் எதிர்பாராத நிலையில் மக்கள் தலைகளுக்கு மேல் வெடித்துச் சிதறுகின்றது. இந்த மக்களின் உயிர்கள் பற்றி யோசிப்பதற்கு ஒன்றுமில்லை என்ற பாணியில், எடுகோள் இல்லாத இப்படியான போரை இந்த முறையில் நடாத்த முடியாது. சமாதானத்திற்கான ஆலோசனைகள் பற்றிப் பேசும் போது, வடக்குகிழக்கு தமிழர்கள் மட்டத்திலும் தமிழர்களின் பிரதிநிதிகளாகிய விடுதலைப் புலிகளுடனும் கலந்தாராயப்படாத நிலையில் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்காதென்பதைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

இப்பொழுதுள்ள பொருண்மியத் தடை குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதல் ஆகியவற்றிற்கு இடையே மக்களால் பயனுள்ள கலந்துரையாடலினைச் செய்ய முடியாது. விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு எதிரானவர்கள் அல்லர். தமிழர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே வேறுபாடு கற்பிப்பதென்பதோ தமிழரைப் புலிகளிடமிருந்து அந்நியப்படுத்துவது என்பதோ யதார்த்த பூர்வமானதல்ல. எனவே நாம் முதலில் இப்பொழுது மேற் கொள்ளப்பட்டுள்ள இராணுவத் தாக்குதலை நிறுத்துமாறும் வழமை நிலையான சூழலை ஏற்படுத்துமாறும், தமிழர் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை மீளத் தொடங்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்'.

இம் மகஜரில் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப்பீட தலைவர் பேராசிரியர் சுசிவத்தம்பி, கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, நடனத்துறைத் தலைவர் பேராசிரியர் சன்முகநாத், பேராசிரியர் விக்னராசா, கிராமிய நாகரீகத் துறைத் தலைவர் வண. கலாநிதி சந்திரகாசன், விரிவுரையாளர்கள் கலாநிதி சுப்பிரமணியம், கனகரத்தினம், கிருஸ்ணவேணி, உதவி விரிவுரையாளர்கள் சிவசுப்பிரமணியம், திருமதி வி. கருணாகரன், சிதம்பரநாதன், செல்வி ஜெயரஞ்சினி, சண்முகலிங்கம் ஆகியோரும் நாடகக் கல்லூரி, சுதந்திர அரங்க நடிப்புக் குழு, கலை இலக்கியப் பேரவை, தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், யாழ் திருமறைக் கலாமன்றம், மகளிர் நடவடிக்கைக் குழு ஆகிய சங்கங்களும் இந்த மகஜரில் கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ளன.

# நாடு பிரிந்தே உள்ளது இதை ஒன்றாக்க விடுதலைப்புலிகளை அடக்க வேண்டும்

*- புத்தபிக்குகளிடம் கேணல் அனுருத்த ரத்வத்த*

'தீர்வுத்திட்டம் ஒரு ஆலோசனை மட்டுமே, அதுவும் எழுத்தளவில் மட்டும் உள்ளது. இரகசியமாகவோ திருட்டுத்தனமாகவோ எதுவும் செய்யவில்லை. இரகசியமாகவோ ஊரடங்குச்சட்டப் பயமுறுத்தல் மூலமோ இவை செயற்படுத்தப்படமாட்டாது. போர் ரீதியில் விடுதலைப் புலிகளை அடக்க வேண்டும். விடுதலைப் புலிகளினைத் தீர்த்துக்கட்டுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துவருகின்றோம். நாம், நாட்டைப் பிரிப்பதாக ஓலமிடுவோரை வவுனியாவுக்கு அப்பால் செல்லுமாறு சவால் விடுகிறேன். பிரியும் என்று கூறும் நாட்டை ஒன்றுபடுத்தவே நாம் செயலாற்று கின்றோம். எழுத்தில் பிரியாவிட்டாலும் செயலளவில் இப்போது நாடு பிரிந்தே உள்ளது. தாண்டிக்குளத்திற்கு அப்பால் எவருமே போக இயலாது.

நான் மட்டுமே போனேன். இந் நாட்டைப் பிரிக்க நாம் இடமளிக்க மாட்டோம். பிளாஸ்டர் போட்டு ஒட்டச்செய்ய மாட்டோம். நிரந்தரமான தீர்வை வழங்கிட நாம் உயிருள்ளவரை உறுதியளிக் கின்றோம். வணக்கத்திற்குரிய பௌத்தகுருமாரின் ஆலோசனை. அறிவுரைகளைப் பின்பற்றி நாட்டின் ஒருமைப்பாட்டை, இறைமையை நிலைநாட்ட நாட்டிற்குச் சேவை செய்வோம் '.

இவ்வாறு சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்தரத்வத்த, பௌத்த மகாநாயக்க தேரோ சிறிரம்புக்க வெலா சிறிவிப் பஸ்ஸியிடம் இருந்து சிறிலங்காவின் தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் ரூபா நிதியை அன்பளிப்பாகப் பெற்று உரையாற்றுகையில் தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய மகாநாயக்க தேரோ, 'நாட்டில் முதலில் யுத்தத்தினால் சமாதானத்தை ஏற்படுத்திப் பின்னர் எத் தீர்வை வேண்டுமானாலும் வெளிப்படுத்திப் பேச்சுவார்த்தை நடத்தலாம். இதுவே எமது விருப்பு. நாம் இன்று தேசிய பாதுகாப்பு நிதிக்கு அளிக்கும் இந்த ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாவும் 1500 மக்களிடம் நாம் சேர்த்த பணம்' என்றார்.

# ஐரோப்பிய பாராளுமன்ற முன்றலில் தமிழர் பேரணி

## அதில் கலந்து கொள்வது வரலாற்றுக் கடமை

புலம் பெயர்ந்து வாழ் தமிழீழ மக்களே!

23ஆம் திகதி பிரான்ஸ் - ஸ்ராஸ்பூக் நகரில் நடக்கவிருக்கும் பேரணியை அனைத்துலக தமிழர் ஒன்றியம் ஒழுங்கு செய்துள்ளது. சிறீலங்காவின் இனப்படுகொலை ரீதியான இராணுவ நடவடிக்கைகளைக் கண்டிக்கவும், தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையைச் சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவும் கோரி, இப்பேரணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தமிழீழ மக்கள், தேசிய விடுதலை என்ற இலக்கை அடைவதற்கு மிக நெருங்கிய காலகட்டத்தில் இப் பேரணி ஐரோப்பிய பாராளுமன்றத்தின் முன் நடைபெறுவது வரலாற்று முக்கியத்துவத்தை இப்பேரணிக்குக் கொடுக்கிறது. காரணம், தமிழீழ விடுதலை பூரண வெற்றியைப் பெற சர்வதேச சமூகத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அதே வேளை, சர்வதேச சமூகத்தில் முக்கிய இடத்தைப் பெறுகின்ற ஐரோப்பிய சமூகம், அதிலும் குறிப்பாக சிலநாடுகள் சிறீலங்கா அரசாங்கத்துக்குக் கொடுக்கின்ற ஆதரவை விலக்கிக் கொள்ளச் செய்தல் வேண்டும். அதுமாத்திரமல்லாமல், எமது விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவையும் அங்கீகாரத்தையும் தருமாறும் செய்தல் வேண்டும். இம் முயற்சி காலத்தின் அவசர தேவையாக உள்ளது. காரணம், சிறீலங்கா அரசாங்கம் கடைசி முயற்சியாக, மிகப்பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு விடுதலைப் போராட்டத்தை நசுக்க முற்படுகின்றது. தமிழ் மக்களுக்குப் பேரழிவைத் தருகின்ற இவ் இராணுவ நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தவும் இதனை வெற்றிகரமாக முறியடிக்கவும் ஐரோப்பிய சமூக நாடுகளை நோக்கிய இப்பேரணி அவசியமாகிறது. தாயகத்தில் இராணுவ ஆக்கிரமிப்பை தோல்வியுறச் செய்யவும், சர்வதேச சமூகத்தில் விடுதலைக்கான அங்கீகாரத்தைப் பெறவும், ஐரோப்பிய பாராளுமன்ற அமர்வின் முதல்நாள் இடம்பெறும்- பலநாடுகளிலுள்ள தமிழர்கள் கலந்துகொள்ளும் இப் பேரணி தமிழர் வரலாற்றில் சிறப்பான இடத்தை வகித்தல் வேண்டும்.

இப்பேரணி வெற்றியும், சிறப்பும் எவ்வளவு மக்கள் கலந்து கொள்கிறார்கள் என்பதிலும் பெரிதும் தங்கியுள்ளது. சிறீலங்கா அரசின் கொடூர நடவடிக்கைகளை, நவாலி- நாகர் கோவில் படுகொலைகளைப் பகிரங்கப்படுத்துவதன் மூலம், 40 ஆண்டுகால இனஒதுக்கலும், இனப் படுகொலையும் இப்புதிய சந்திரிகாவின் அரசாங்கத்திலும் தொடர்கிறது என்பதைக் காட்டுவதன் மூலம் எமது விடுதலைப் போராட்டம் நீதியானது, அதனை நடாத்தும் விடுதலைப் புலிகள், விடுதலை வீரர்கள், மக்களின் ஏக பிரதிநிதிகள், ஆயுதப் போராட்டம் சட்டரீதியானது என்பதை வெளிப்படுத்துகிறோம். அதேவேளை, பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வதன் மூலம், இது ஒரு மக்கள் போராட்டம் என்றும், ஜனநாயக அடிப்படையைக் கொண்ட சுயநிர்ணய உரிமைக்கான தேசிய விடுதலைப் போராட்டம் என்றும் நேரடித் தரிசனமாக நிரூபிக்கிறோம். அதன் மூலம், எமது விடுதலைப் போராட்டத்துக்கான அங்கீகாரத்தை தமிழ் மக்களின் ஒன்றிணைந்த எழுச்சிகரமான சக்தியின் தளத்தில் கோரி நிற்கிறோம். எனவே இதில் கலந்து கொள்வது தமிழ் மக்களின், தமது விடுதலைக்கான வரலாற்றுக் கடமையாகிறது.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழீழ விடுதலைப் புலிகள்

# கைதடி நிதிப் பரப்புரைக் கூட்டத்தில் 18 இலட்சத்து 55 ஆயிரம் ரூபா பாதுகாப்பு நிதிக்கு வழங்கப்பட்டது

அண்மையில் கைதடி சனசமூக நிலைய முன்றலில் இடம் பெற்ற, தமிழீழத் தேசிய பாதுகாப்பு நிதிப் பரப்புரைக் கூட்டத்தில் கைதடி- நாவற்குழி மக்கள் 18 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாவைத் தாமாகவே முன்வந்து தமிழீழ நிதிப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி யிடமும், தமிழீழ சமூக மேம்பாட்டுத்துறைப் பொறுப்பாளர் திரு. கி. பாப்பாவிடமும் வாரி வழங்கினர்.

பாப்பா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திரு. தமிழேந்தி, தாமாகவே முன்வந்து ஒரு இலட்சம் ரூபாவை பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்து உதவியவர்களில் ஒருவரான திரு. சின்னத்தம்பி சரவணமுத்து ஆகியோர் உரை நிகழ்த்தினர். கூட்ட முடிவில் தென்மராட்சி கலை, பண்பாட்டுக் கழகத்தின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.



கைதடி தெற்கைச் சேர்ந்த கால் ஊனமுற்ற வயோதிபரான சடையர் கந்தர் என்பவர் 30,000 ஆயிரம் ரூபாவினை நிதிப்பொறுப்பாளர் திரு தமிழேந்தியிடம் கையளிப்பதனைக் காணலாம்

'தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதியை நாம் விடுதலைப் புலிகளைத் தேடித்தேடிச் சென்று கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்தால்தான் மக்களை நிம்மதியாகவும் நிறைவாகவும் பாதுகாக்க முடியும். அரசுக்குக் கோடிகோடியாக பணம் வருகிறது. புலிகளுக்கு நாம் கொடுப்பது போதாது. அவர்கள் 100 கோடி ரூபாவைத்தான் கேட்கிறார்கள். எனவே நாம் புலிகளுக்கு நிதி உதவியை வாரி வழங்க முன்வர வேண்டும்'

இவ்வாறு அண்மையில் கைதடியில் இடம்பெற்ற தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதி பரப்புரைக் கூட்டத்தில் ஒரு இலட்சம் ரூபாவைப் பாதுகாப்பு நிதிக்கு வழங்கிய சின்னத்தம்பி சரவணமுத்து என்பவர் தெரிவித்தார்.

எமது உயிர்கள் வாழமெண்டுமென்றால், விடுதலைப் புலிகளுக்கு உதவுங்கள். இல்லாவிடின் பின்னர் எல்லாவற்றையும் இழந்துவிட்டு கவலைப்பட நேரிடும்.

தமிழீழம் விடுதலை பெறும் காலம் அண்மித்துவிட்டது. இதற்கு எமது தேசியத் தலைவர் பிரபாகரனே காரணமாக இருக்கிறார். இவ்வாறான நேரத்தில் நாம் அவர்கள் கேட்கும் அனைத்தையும் கொடுக்கத் தயங்கக்கூடாது.

எமது இனத்தைக் காக்க தமிழீழ மண்ணின் பெயரால், தமிழ் மக்களின் பெயரால், இந்த தமிழ் இனத்தின் பெயரால் நான் எல்லோரையும் பணிவுடன் கேட்கிறேன். அனைவரும் இதற்கு உதவுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரான்ஸ் - ஸ்ராஸ்புக் நகரில் நடைபெறும் எழுச்சிப் பேரணிக்கு விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் நல்லாசி!

எதிர்வரும் 23ஆம் நாள் பிரான்ஸ், ஸ்ராஸ்பூக் நகரில் ஐரோப்பா வாழ் தமிழ் மக்கள் நடாத்த இருக்கும் மாபெரும் பேரணி, சிறப்பாக நடைபெற விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் நல்லாசி வழங்கியுள்ளது. தமிழீழ மக்களின் தேசிய எழுச்சியை வெளிப்படுத்துவதாக அமையும் இப்பேரணி ஒரு வரலாற்றுத் தேவையாக உள்ளதென, தாயகத்தில் இருந்து கிடைக்கப் பெற்ற குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பேரணிக்கு ஆதரவு கொடுக்கும் வகையில், இத்தாலியில் மாபெரும் சர்வதேச கலாச்சார நிகழ்ச்சி நடைபெற உள்ளது. 25 வெளிநாட்டு- அமைப்புக்களுடன், தமிழீழ மக்களும் இணைந்து நடத்தும் கலாச்சார நிகழ்வு நான்கு நாட்கள் நடைபெறவுள்ளது.

இதேவேளை, இம்மாதம் 22ஆம் நாள் நியூயோர்க் நகரில், ஐநா. சபை முன்றலில் ஐநா. சபையின் 50 வது நிறைவு விழாவில் கலந்து கொள்ளவரும் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவைக் கண்டித்து நடைபெறும் பேரணியை இலங்கைத் தமிழ்ச் சங்கமும், உலகத் தமிழர் இயக்கமும் ஒழுங்கு செய்துள்ளன.

# குருதிக்கொடை உயிர்களைக் காப்பாற்றும் பணக்கொடை ஒரு தேசத்தைப் பாதுகாக்கும்!

இன்றைய போராட்ட வளர்ச்சிக்குக் காரணமான பிரதான விடயங்களில் ஒன்று, முன்னர், மீட்புநிதிக்கு மக்கள் வழங்கிய இரண்டு பவுண் ஆகும். விமானங்கள் வீழும்போதும், கப்பல்கள் மூழ்கும்போதும், படைமுகாம்கள் வெற்றிகொள்ளப்படும்போதும் மீட்பு நிதிக்கு மக்கள் செலுத்திய பவுண்கள்தான் நினைவுக்கு வருகின்றன. எனவே, எமது, போராட்டம் பெற்றிருந்த அந்த இராணுவ வெற்றிகளை, மீட்புநிதிக்குப் பங்களித்த மக்களும் பங்கிட்டுக் கொள்ளலாம்.

மக்களிடமிருந்து மீட்புநிதிபெற்று 4 ஆண்டுகள் முடிவடைந்துவிட்டன. இந்த 4 ஆண்டுகாலத்தில் புலிகள் இயக்கம் பெருமளவு வளர்ந்துவிட்டது. அதன் ஆட்பலம் அதிகரித்துவிட்டது. பல படையணிகள் புதிதாக உருவாக்கப்பட்டுவிட்டன. அதனால் அதற்கதற்கே உரித்தான ஆயுத வகைகளின் தேவையும் அதிகரித்துவிட்டது. ஆட்பலமும் - ஆயுதத்தேவையும் அதிகரித்துவிட்டதால் நிதித்தேவையின் அளவும் பெருகிவிட்டது.
போர்க்களங்களில் புலிவீரர்கள் காட்டும் போர்த்திறனுக்கும் - துணிவுக்கும் சிங்களச் சிப்பாய்களால் ஈடுகொடுக்க முடியாதுள்ளது என்ற விடயம் சிங்களத் தளபதிகளுக்கே நன்கு தெரியும். அதனால் இப்போது (மூன்றாம் ஈழப்போரில்) சிங்களத் தளபதிகள் ஒரு புதிய போர் உபாயத்தை பயன்படுத்துவதில் அக்கறை காட்டுகின்றனர். அதாவது படைக்கல சக்தியை அதிகம் பயன்படுத்தி புலிகளோடு சண்டையிடுவது என்பதுவே அதுவாகும். படைக்கல சக்தி (Fire Power) என்றால்—எறிகணைகள், பீரங்கிக் குண்டுகள், விமானக் குண்டுகள் மற்றும் எல்லாவகை எறிகுண்டுகளுடன் துப்பாக்கி ரவைகளையும் குறிப்பிடலாம்.


> **துப்பாக்கி ஏந்திய சிங்களச் சிப்பாய்கள் சண்டைகளில் செய்ய முடியாததை - கருவிகள் மூலம் ஏவப்படும் - வெடிப்பொருட்களைப் பயன்படுத்தி, தூர இருந்தபடி, செய்ய முனைவதே சிங்களத் தளபதிகளின் இப்போதைய நோக்கமாகும். சண்டைகள் நடைபெறும்போது - துப்பாக்கிவீச்சு எல்லைக்குள் இருபகுதிப் படைகளும் சந்திக்க முன்னரே - பல்லா யிரக்கணக்கில் எறிகணைகளையும் - பீரங்கிக் குண்டுகளையும் புலிகளை நோக்கி ஏவிவிட்டு, புலிவீரர்களை அழிக்கச் சிங்களப்படை முயல்கின்றது**

அதாவது, துப்பாக்கி ஏந்திய சிங்களச் சிப்பாய்கள் சண்டைகளில் செய்ய முடியாததை - கருவிகள் மூலம் ஏவப்படும் - வெடிப்பொருட்களைப் பயன்படுத்தி, தூர இருந்தபடி, செய்ய முனைவதே சிங்களத் தளபதிகளின் இப்போதைய நோக்கமாகும். சண்டைகள் நடைபெறும் போது - துப்பாக்கிவீச்சு எல்லைக்குள் இருபகுதிப் படைகளும் சந்திக்க முன்னரே - பல்லாயிரக்கணக்கில் எறிகணைகளையும் - பீரங்கிக் குண்டுகளையும் புலிகளை நோக்கி ஏவிவிட்டு, புலிவீரர்களை அழிக்கச் சிங்களப்படை முயல்கின்றது. அதேவேளை, இரு பகுதியினர்க்கும் இடையே துப்பாக்கிச் சண்டைகள் ஆரம்பமானதும் புலிகள் பக்கத்தில் இழப்பை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் - ஒவ்வொரு சண்டையிலும் - இலட்சக்கணக்கான ரவைகளை சிங்களச் சிப்பாய்கள் தண்ணீர்போலச் செலவுசெய்கின்றனர்.

'ஒப்பறேசன் முன்னோக்கிப் பாய்தலின்போது இந்தத் தாக்குதற் தந்திரத்தையே சிங்களப்படைகள் பயன்படுத்தியிருந்தனர். இதுபோலவே மணலாற்றுப் பகுதியில் அமைந்திருந்த ஐந்து இராணுவ முகாம்கள் மீது புலிவீரர்கள் தொடுத்த பாரிய தாக்குதலை முறியடிக்க சிங்களப்படைகள் பிரமாண்டமான தொகையிலான படைக்கல சக்தியை பயன்படுத்தியிருந்தது. சிலநாட்களுக்கு முன்னர், சுன்னாகம் நோக்கிப் படையினர் முன்னேற முயன்றபோதும் இவ்விதம் பிரமாண்டமான தொகையில் படைக்கல சக்தியைப் பயன்படுத்தியே வெல்ல முயன்றனர். குடாநாடு மீதான படையெடுப்பிற்கு பயன்படுத்துவதற்காக 80,000 எறிகணைகள் வடபுலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாக கொழும்புச் செய்தித்தாள் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. இதில் பத்தாயிரம் எறிகணைகளையாவது இதுவரை எதிரி பயன்படுத்தியிருப்பான் என எண்ணலாம்.

சண்டைகளின் போது தமது படையாட்களின் இழப்புக்களைத் தவிர்ப்பதுடன் - புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் சலபமான முறையில் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தும் நோக்கு டன், சிங்களத் தளபதிகள், இந்தப் படைக்கல சக்தியைப் பெருமளவில் பயன்படுத்துகின்றனர்.

இதே படைக்கல சக்தியை சிங்களப் படைகள் மீது, புலிகளும் திருப்பிப் பயன்படுத்தினால் படையினர் அதிக எண்ணிக்கையில் உயிர் இழப்புக்களைச் சந்திப்பர். ஆனால் புலிகளிடம் அந்தளவு தொகைப் படைக்கல சக்தி இல்லை. ஒரு சமரில் இராணுவம் ஆயிரம் எறிகணைகளை ஏவினால் அதற்குப் பதிலாக புலிகள் பத்து அல்லது இருபது எறிகணைகளையே ஏவக்கூடிய நிலையில் இருக்கின்றனர். அதேபோல புலிகளின் ஒரு காவல் அரணைத் தாக்க, படையினர் பல்லாயிரக்கணக்கான ரவைகளைச் செலவிடுவர். ஆனால் படையினரின் ஒரு காவல் அரணைத் தகர்க்கப் புலிகள் சில பத்து அல்லது ஒருசில நூறு ரவைகளையே பயன்படுத்துகின்றனர்.




ஏனெனில் எறிகணைகள், ரவைகள் உட்பட எல்லாவகை எறிகுண்டுகளும் விலை கூடியவை. இதைவிட இவற்றை ஏவும் கருவிகளின் விலை மிக அதிகம். அத்துடன் இவற்றை 'டொலர்' பணம் கொடுத்தே கொள்வனவு செய்ய முடியும். ஒரு எறிகணையின் பெறுமதி 100 டொலர். டொலர்க் கணக்குப் பார்த்தால் அது ஒரு சிறு தொகை.




ஆனால் அதை எமது ரூபாவிற்கு மாற்றிப் பார்த்தால் அது ஐயாயிரம் ரூபாவாக இருக்கும். எனவே நாம் ஒரு எறிகணை வாங்க 5,000 ரூபா செலவழிக்க வேண்டியுள்ளது. ஆனால் ஒரு செக்கனில் அந்த எறிகணை செலவழிந்துவிடும். போராட்டப் பங்களிப்பாக ஒருவர் ஐயாயிரம் ரூபா பணத்தை இயக்கத்திற்குக் கொடுக்கின்றார் என்று வைத்துக் கொண்டாலும் அவர் கொடுத்த பணம் ஒரு எறிகணை வாங்குவதற்குத்தான் போதுமானதாக இருக்கும். அதுவும் ஒரு செக்கனில் செலவழிந்துவிடும்; இதனால் தான் சிங்கள அரசு பெருந்தொகைப் பணத்தை போரிற்கெனச் செலவிடுகின்றது.

சிங்கள அரசு ஆண்டுதோறும் 4,000 கோடி ரூபாவை போரிற்கெனச் செலவிடுகின்றது. ஆனால் புலிகள் இயக்கம், ஆண்டுதோறும் 180 கோடி ரூபாவையே செலவிடக்கூடிய நிலையில் உள்ளது. இந்தப் போர்ச் செலவைப் புலிகள், இரண்டு மடங்காக அதாவது 360 கோடி ரூபாவாக உயர்த்துவார்களாக இருந்தால் எமது போராட்டம் இழப்புக்களைக் குறைத்து விரைவாக முன்னேறும்.

ஒரு இராணுவ நடவடிக்கை மூலம் சிங்களப்படைகள் எமது ஊர்களுக்குள் புக முனையும்போது - சிங்களப்படைகள் ஏவுவதுபோல - புலிகளும் எறிகணைகளை ஆயிரக்கணக்கில் ஏவினால் சிங்களப் படைகள் சிதறி ஓடும். ஆனால், உண்மையில் அவ்வாறு நடப்பது இல்லை. எறிகணைகளை அதிக எண்ணிக்கையில் ஏவ முடியாது இருப்பதால்தான் எதிரிப் படைகள் விரைவாக எமது ஊர்களை ஆக்கிரமிக்கின்றன.

அன்பிற்குரிய எமது மக்களே! நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். எதிரிப் படைகள் மீது, நாமும் பாரிய தொகையில் படைக்கல சக்தியைப் பயன்படுத்தும் அதேவேளை எதிரியானவன் தனது படைக்கல சக்தியை எம்மீது பயன்படுத்தவிடாது தடுக்கும் ஆயுதங்களையும் நாங்கள் பெற்றுவிட்டால் வெற்றிக்குச் சொந்தக்காரர்களாக நாமே இருக்கலாம். விமான எதிர்ப்பு ஆயுதங்களை நாம் பெற்றுக் கொண்ட பின்னர் எதிரி விமானங்கள் தமது

தொடர்ச்சி மறுபக்கம்

படைக்கல சக்தியைப் பயன்படுத்த முடியாது தவிக்கின்றன. இதேபோல 'ஆட்லறி' உபகரணத்தை நாமும் பெற்றுக் கொண்டால் பலாலியில் உள்ள எதிரிப்படைக்கு குலைப்பன் காய்ச்சலை உண்டு பண்ணலாம். ஆனால் இவற்றிக்குப் பெருந்தொகைப் பணம் வேண்டும். மக்கள் மனதுவைத்தால் இந்தப் பணத் தேவை என்பது ஒரு அற்ப விடயமாகிவிடும்.

ஒரு சிறிய நாடான இசுரேல் தன்னைவிட 15 மடங்கு




அதிக சனத்தொகை கொண்ட அரபு நாடுகளை போரில் வென்றிருக்கின்றது. இதற்கான பிரதான காரணங்களில் ஒன்று இசுரேலிடம் உள்ள பிரமாண்டமான படைக்கல சக்தி ஆகும். பல அரபுநாடுகள் கூட்டாக இசுரேலைத் தாக்கினாலும்கூட அந்தத் தாக்குதல்களின் வீரியத்தைச் சிதைக்கும் சக்தியை இசுரேலியப் படைகளுக்குக் கொடுப்பது அதன் பிரமாண்டமான படைக்கல சக்தியாகும். பல ஆயிரம் அரபுப் படையணிகள் இசுரேலை நோக்கி முன்னேறிவரும் போதே இசுரேலியப் படைகள் - தமது 'ஆட்லறி'களையும் - டாங்கிகளையும் - விமானங்களையும் பயன்படுத்தி, அதாவது வெடிப்பொருட்களை மட்டும் பயன்படுத்தி அரபுப்




படையணிகளைச் சிதறடிக்கின்றன. பின்னர் சிதைந்த அரபுப் படையணிகள் மீது பாயும் இசுரேலியப் படைகள் அவற்றைத் துவம்சம் செய்து வெற்றியைப் பெறுகின்றன.

ஆனால் இதற்கு மாறான ஒரு உலக உதாரணமும் உண்டு. பொசுனிய சண்டை பற்றி எமது மக்களும் அறிந்திருப்பர். பொசனியா என்ற அரசை அங்கு வாழும் முசுலிம்கள் பிரகடனப்படுத்தியிருந்தனர். ஆனால் அதை அருகில் இருந்த சேர்பியர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இருபகுதியினருக்கும் இடையே போர் வெடித்தது. பொசனிய முசுலிம்கள் மீது சேர்பியப் படைகள் தாராளமாக படைக்கல சக்தியைப் பயன்படுத்தி அவர்களைக் கொன்று தள்ளுகின்றனர். இதேவேளை, பொசுனிய இராணுவத்திடம் ஏராளமான ஆட்பலம் உண்டு. ஆனால் அவர்களிடம் ஆயுத பலமும் - படைக்கல சக்திப் பலமும் இல்லாதிருப்பதால் அகதிகளாக இடம் பெயர்ந்தோடி அல்லல்படுகின்றார்கள். அத்துடன் போரில் தோல்வி கண்டபடி அழிந்து கொண்டிருக்கின்றனர்.

எனவே போரில் வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் விடயங்களில் படைக்கல சக்தியும் ஆயுத பலமும் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஆனால் இவற்றை இலவசமாக எங்கும் பெற்றுவிட முடியாது. பெருந்தொகைப் பணத்தைச் செலவழித்தே இவற்றைக் கொள்வனவு செய்ய முடியும்.

இப்படித்தான் யூத மக்களின் விடுதலைப் போரின் போதும் ஒரு சம்பவம் நிகழ்ந்திருந்தது. அதாவது மேலதிக ஆயுதங்களும் - படைக்கல சக்தியும் யூதப் போராளிகளுக்கு அவசரமாகத் தேவைப்பட்டது. ஆனால் அந்த விடுதலை இயக்கத்திடம் அவற்றைக் கொள்வனவு செய்வதற்கேற்ற பணம் இருக்கவில்லை. பணத்தை எங்காவது பெற்று படைக்கலங்களையும் - படைக்கல சக்தியையும் வாங்குவதா அல்லது ஒட்டுமொத்தமாக யூத மக்களே அழிந்துபடுவதா என்ற நிலை எழுந்தது. அப்போது யூத மக்கள் தங்களது சேமிப்புக்களில் பெரும் பகுதியை போராட்டத்திற்கென வழங்கி யூதப் போராளிகள் சந்தித்த நிதி நெருக்கடியை நீக்கி இசுரேல் என்ற நாடு உருவாக உதவினர்.

இவ்விதம், ஒரு விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு பணப்பலம் அவசியமாகின்றது. ஒரு மனிதனின் உடலுக்கு எலும்புகள் பலத்தைக் கொடுக்கின்றன. அந்தப் பலத்தை வைத்துத்தான் மனிதன் சவால்களுக்கு முகம் கொடுக்கின்றான். அதேவேளை அந்த எலும்புகளுக்கு உணவளித்து - அதை உறுதியாக வைத்திருக்க மனிதனின் குருதி உதவுகின்றது.

எமது இயக்கத்தின் ஆட்பலத்தை எலும்புகளுக்கும், நிதியை குருதிக்கும் ஒப்பிடலாம். எலும்புகளை செயற்பட வைக்கும் சக்தி குருதிக்குண்டு.

மனிதனுக்கு எலும்புகள் இல்லாதுவிடின் அவன் பலம் இழந்து போய்க் கிடப்பான். அப்போது அவனை காகங்கள் கொத்தித் தின்றுவிடும்.

மனிதனுக்கு குருதி இல்லாதுவிட்டால் அவன் இறந்துவிடுவான்.

மனிதனுக்கு எலும்பும் தேவை, குருதியும் தேவை.
அதேபோல, எமது தேசத்திற்கு ஆட்பலமும் தேவை, நிதிப்பலமும் தேவை.

தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதி என்ற பெயரில் போராட்டத்திற்கான நிதிதிரட்டலை ஆரம்பித்துள்ளோம். இந்த நிதிக்கு வாரிவழங்கி தேசத்தின் பாதுகாப்பை உறுதிசெய்து கொள்வோம்.
இந்த வகையில்

**குருதிக்கொடை உயிர்களைக் காப்பாற்றும்,**
**பணக்கொடை ஒரு தேசத்தைப் பாதுகாக்கும்!**




## விடைபெறுதல்..

வசந்தி வாசலில் நிற்பதும் தெரிந்தது.

'ஏதேன் பிரச்சினையேக்கா?' அவள் வண்டியை நிறுத்த முன்பே வசந்தி கேட்டாள்.

'இல்லை' மெதுவாகச் சிரித்தாள்.

வசந்தி அவளை உற்று நோக்கினாள். அவளின் சிரிப்பினுள் ஊடுருவியிருந்ததை அறிந்து கொள்ள முயற்சிப்பதாய் இருந்தது அந்தச் செய்கை.

'நிகழ்ச்சி எத்தனை மணிக்கு வசந்தி?'

'நாலு மணிக்குத் தான்'

'அதுக்குள்ள மற்ற வேலைகளை முடிச்சிடலாம் என்ன?' அவள் அங்கிருந்த கதிரையொன்றில் சாய்ந்து கொண்டாள்.

'எல்லாத்தையும் எடுத்து வையுங்கோ, கொஞ்ச நேரத்தால வாறன்' கால்களை நீட்டிக்

கொண்டாள். அவளுடைய மன ஓட்டத்தை யுணர்ந்தவளாய் வசந்தி கதவுகளைச் சாத்திக் கொண்டு உள்ளே சென்றாள்.

அந்த வெளி விறாந்தை மிகவும் ஒடுக்கமாயிருந்தது. சுவரோரம் வரிசையாய் நாலைந்து கதிரைகள் மட்டுமிருந்தன. முற்றத்தில் குரோட்டன்கள் சடைத்திருந்தன. அடியில் நீருற்றியதின் ஈரலிப்பு அன்னமும் எஞ்சியிருந்தது. சற்றுத் தள்ளி மதிலோரம், சீமைக் கிழுவையொன்று பெரிதாய் கிளைகள் பரப்பியிருந்தது. ஊதா நிறத்தில் சின்னப் பூக்கள் மரத்தின் அடியில் பரவியிருந்தன. அவளுடைய பார்வை எல்லாவற்றின் மீதும் பதிந்து மீண்டு கொண்டிருந்தது. தெருவின் வாகன இரைச்சல்கள் எதுவும் அவளின் கவனத்தைக் கலைக்கவில்லை. தன்னை ஓர் அமைதிக்குள் ஆழ்த்திக் கொள்ள விரும்புவளாய் அவள் காணப்பட்டாள். அந்த ஒடுக்கமான விறாந்தையின் தனிமையில் கண்களை மூடிக்கொண்டு, வெகு தொலைவு நோக்குபவளாய் அமர்ந்திருந்தாள். திடீரென எழுந்த அவளுக்குப் பரிச்சயமான மெல்லிய சத்தம் அவளை விழிக்க வைத்தது. சுற்றிலும் பார்த்துக் கொண்டாள். மரத்தின் மேற்கிளையில் இரண்டு அணில்கள் அமர்ந்திருந்தன. இத்தனை நேரம் அவற்றை மறந்திருந்ததற்காகக் கவலைப்பட்டாள். ஒவ்வெரு காலையிலும் அவை அந்த மரத்திற்கு வரும். ஏனையவற்றிலிருந்து அந்த அணில்களை வேறுபடுத்துமளவிற்கு அவள் அவற்றோடு பரிச்சயமாகியிருந்தாள். நாளைக் காலை அவை வருகின்ற நேரம் தான் அங்கிருக்கப் போவதில்லையெனும் எண்ணம் உந்தியதால் அவற்றை நெருங்க முற்பட்டவளாய் முற்றத்திற்கு இறங்கினாள். இரண்டும் அவளுடைய வருகையால் பாதிக்கப்படாமல் அந்தக் கிளையிலேயே இன்னமும் அமர்ந்திருந்தன. சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு அங்கிருந்து நடந்தாள். கதவைத் திறந்த மெல்லிய ச்த்தம் அவற்றைப் பாதித்திருக்கக் கூடுமெனத் திரும்பிப் பார்த்தாள். அவை அப்படியே தானிருந்தன.

உள்ளெ ஒவ்வொருவரும் ஏதோவொரு வேலையில் மூழ்கிப் போயிருந்தார்கள். கால்கள் நகர்கின்ற ஓசையும் மெலிதான பேச்சுக் குரல்களும் இடையிடையே கேட்டவாறிருந்தன. இலேசாய் இருட்டான நடைபாதையைக் கடந்து கடைசியாய் இருந்த பெரிய அறைக்கு வந்தாள். வசந்தி 'பைல்'களுக்கிடையில் எதையோ தேடிக்கொண்டிருந்தாள்.

'எல்லாம் எடுத்தாச்சா வசந்தி?'

'நீங்கள் பார்க்க வேண்டியதெல்லாம் அந்த மேசைக்கு மேல வைச்சிருக்கிறன்' அறையின் ஒரு மூலையில் யன்னலோரமாக இருந்த மேசையை நோக்கி நடந்தாள். அதன் மேலிருந்த காகிதங்களைச் சற்று நேரம் விரல்களால் தடவியவாறிருந்தாள். முன்பு போல் எதையும் அவளால் எடுத்த வேகத்தில் செய்ய முடியவில்லை. இப்போதெல்லாம் எல்லாவற்றையுமே நிதானித்து உள்வாங்கிக் கொள்ள வேண்டும் போலுணர்ந்தாள். தன்னைச் சுற்றியுள்ள அத்தனை அசைவுகளையும் மனதினுள் நிரப்பிக் கொள்ள விரும்பினாள். மனது எந்தக் கவலையுமின்றித் தெளிவாயும் உறுதியாயும் இருந்தாலும் தான் பிரிய நேர்கின்றவைகளுக்காக இடையிடையே அவள் துயரப்படத் தான் செய்தாள்.

அந்தக் காகிதங்கள் ஒவ்வொன்றும் பல்வேறு சம்பவங்களை நினைவூட்டின. இன்றுவரையும் பழகிய முகங்களை நினைவுக்குக் கொண்டுவந்தன. தன்னை ஆக்கிரமித்த நினைவுகளினூடே அவற்றைப் பார்வையிடத் தொடங்கினாள்.

அவள் எழுந்த போது வசந்தி புறப்படத் தயாராக வாசலில் நின்று கொண்டிருந்தாள் வண்டியில் ஏறுவதற்கு முன்னர் முகாமை ஒருமுறை பார்த்துக் கொண்டாள். இந்த வெளிச்சத்தில் முகாமையும் மரங்களையும் பார்ப்பது இதுதான் கடைசித் தட

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# உயிர்ப்பூட்டியவர்கள்

உயர்தர வகுப்புப் படிக்கும் போது இயக்கத்துடனான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டவள் நித்திலா. பாடசாலைக் கல்வியில் கவனம் செல்லவில்லை. தேசவிடுதலை இயக்கம் பற்றி அறிந்து கொள்வதற்கும், விவாதிப்பதற்கும், தலைமறைவாக இயங்கிவரும் போராளிகளுடன் தொடர்பு கொள்வதற்குமாக படிப்பதற்குரிய நேரத்தையும் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொண்டாள். இவளது கடின உழைப்பால், 1985 தைமாதம் நெல்லியடிப் பிரதேசத்தில் தேச விடுதலைக்கு ஆதரவாகப் பெண்களை அணிதிரட்டுவதற்கும் அவர்களின் சமூகப் பிரச்சனைகள் பற்றி ஆராய்வதற்கும் பொறுப்பாக விடப்பட்டாள். 1985 ஆவணி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட சுதந்திரப் பறவைகள் இதழின் வெளியீட்டுக் குழுவில் ஒருத்தியானாள்.

1986 இல் பௌதிக விஞ்ஞானப் பட்டப்படிப்புக்காகப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. தேச விடுதலைக்கான கடமையோடு படிப்பையும் தொடர்ந்தாள்.

அடிக்கடி லீவு போட்டுவிட்டுத் தனது பிரதேசங்களுக்குச் சென்று விடுவாள். மழலைகளின் எதிர்காலம் குறித்து அதிக அக்கறை கொண்டிருந்தாள். இயக்கத்தின் வேலைத்திட்டங்களான இலவச பாலர் பாடசாலைகள், தும்பு, பன்னக் கைத்தொழில் நிலையங்கள் முதலியவற்றை நிறுவினாள். இவற்றுடன் இணைந்த மாதர் சங்கங்கள், மகளிர் நூல்நிலையங்கள் என்பனவற்றை நிறுவி, மக்களின் குறைகளைக் களைந்ததோடு, இயக்கத்துக்கும் மக்களுக்குமிடையில் மிக நெருக்கத்தை ஏற்படுத்தினாள்.



லெப்.நித்திலா

1987 வைகாசியில் வடமராட்சியில் ஒபரேஷன் லிபரேஷன் நடவடிக்கையின்போது, களத்தில் நிற்கும் போராளிகளுக்கு சுதந்திரப் பறவைகள் உணவு சமைத்து அனுப்பிக் கொண்டிருந்தனர். எமது பக்கம் இழப்புகள் அதிகரிக்க, எதிரி முன்னேறத் தொடங்கினான். பாதுகாப்பற்ற நிலையில் பின்கள வேலையில் நின்றவர்கள் தலைமறைவாகின்றனர். எப்படியோ உயிர் தப்பி விட்டபோதிலும் நித்திலா தன்னுடனிருந்த தோழிகள் சிலரைப் பிரிந்து விட்டாள். எஞ்சியிருந்த நித்திலாவும் மற்றைய இருவரும் சாதாரணமான குடும்பப் பெண்களைப் போல் வேடம் தரித்து, இரண்டு பெரிய தடைமுகாம்களைக் கடந்து, கால்நடையாகவே தென்மராட்சியை அடைந்தனர்.

1987 இல் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் இரண்டாவது பயிற்சி முகாமில் பயிற்சி எடுத்த நித்திலா தன் படிப்பை நிறுத்தத் தீர்மானித்தபோது, இயக்கம் இயலுமானவரை படிப்பைத் தொடருமாறு சொன்னது. எனவே இவள் படித்துக் கொண்டே யாழ். நகரப் பகுதியில் சமூக அரசியல் வேலைத் திட்டத்தில் ஈடுபட்டாள். இயக்கத்தில் இருந்தவாறே படிப்பைத் தொடரும் ஏனைய தோழிகளுக்கு வேண்டிய சகல தேவைகளையும் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள்.

லெப். கேணல் திலீபன் உண்ணாவிரதம் இருந்த சமயம் மேற்கொள்ளப்பட்ட பாத யாத்திரையில் முக்கிய பங்கு வகித்தாள். 26. 06.1989 அன்று பன்றிக் கெய்த குளத்தில் சிறீலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் பதின்மூன்று தோழர்களுடன் லெப். நித்திலா வீரச்சாவைத் தழுவிக் கொண்டாள்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

எமது பக்கம் இழப்புகள் அதிகரிக்க, எதிரி முன்னேறத் தொடங்கினான். பாதுகாப்பற்ற நிலையில் பின்கள வேலையில் நின்றவர்கள் தலைமறைவாகின்றனர். எப்படியோ உயிர் தப்பி விட்டபோதிலும் நித்திலா தன்னுடனிருந்த தோழிகள் சிலரைப் பிரிந்து விட்டாள். எஞ்சியிருந்த நித்திலாவும் மற்றைய இருவரும் சாதாரணமான குடும்பப் பெண்களைப் போல் வேடம் தரித்து, இரண்டு பெரிய தடைமுகாம்களைக் கடந்து, கால்நடையாகவே தென்மராட்சியை அடைந்தனர்.

இயக்கங்கள் 1982, 1983 களில் இரகசியமாக வெளியிடும் துண்டுப் பிரசுரங்களிலெல்லாம் வெளிநாட்டு கெரில்லா இயக்கங்களின் பெண்கள் அமைப்புக்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டன. இதைக் கேள்வியுற்று, நாமும் நமது கெரில்லா இயக்கங்களுடன் இணைந்து போராட வேண்டும் என்ற ஆவலில் அவர்களைத் தேடி அலைந்தவர்களில் டோராவும் ஒருவர்.

துண்டுப் பிரசுரங்களைக் கொண்டு வருபவர்களுடன் இரகசியமாகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டபோது, முதலில் வெளியிலிருந்து உதவிகள் செய்யுமாறும், பின்னர் பெண்பிள்ளைகளை எடுக்கும் போது எடுக்கலாம் எனவும் கூறப்பட்டது. டோராவும் இரகசியமாக உதவிகள் செய்வதில் ஈடுபட்டிருந்தாள்.



கப்டன் டோரா

பாடசாலைப் படிப்பு அரைகுறையானது. புரட்சி அறிவு புகுந்து கொண்டது. அம்மாவுக்கும் அப்பாவுக்கும் பொய் சொல்ல வேண்டிவந்தது. புலிகளின் இரகசியமான பிரச்சார வகுப்பு, தையல் வகுப்பு என்று கூறப்பட்டது. ஆயுதம் பற்றிய அறிவைப் பெறும் வகுப்பு சமையல் கலை பயிலும் வகுப்பு எனக் கூறப்பட்டது.

வீட்டுக்கு எல்லாம் தெரிய வந்ததும் அப்பா கட்டுப்பாடுகளை விதித்தார். தேசத்துக்காகப் போராடும் உரிமையைப் பெறுவதற்காக டோரா வீட்டுக்குள் போராடினாள், வெற்றியும் கண்டாள். கடைசியில் வெளிப்படையாகவே தனது பணிகளைச் செய்யத் தொடங்கினாள்.

லெப். நித்திலா, கப்டன் டோரா உட்படப் பல இளம் பெண்கள், ஏனைய பெண்கள் மத்தியில் விடுதலைக் கருத்தை விதைத்தார்கள். புலிகளின் பிரச்சார ஏடுகள் கைமாறின. பெண்களுக்கான இரகசியக் கருத்தரங்குகள் கிராமங்களின் மூலை முடுக்கெல்லாம் நடாத்தப்பட்டன. சுதந்திரப் பறவைகள் இதழின் உருவாக்கத்திலும் டோரா பெரும் பங்காற்றினாள். வசதியற்ற, தொழில் வாய்ப்பற்ற பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக பன்னவேலை, தையல் வேலை, மனையியல், உணவு பதனிடுதல், பாதுகாத்தல் போன்ற வகுப்புகளைப் பெண்களிடையே நடாத்தி சிறு கைத்தொழில் நிலையங்களையும் உருவாக்கப் பாடுபட்டாள்.

வசதியற்ற, தொழில் வாய்ப்பற்ற பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக பன்னவேலை, தையல் வேலை, மனையியல், உணவு பதனிடுதல், பாதுகாத்தல் போன்ற வகுப்புகளைப் பெண்களிடையே நடாத்தி சிறு கைத்தொழில் நிலையங்களையும் உருவாக்கப் பாடுபட்டாள்.

சுயமாகவே பல வேலைகளைத் திட்டமிட்டு ஆர்வத்தோடு செயற்படுத்தி வந்த டோரா நெல்லியடி, கரவெட்டி, கரணவாய் போன்ற பிரதேசங்களில் மகளிர் அணிப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு 1985 - 1986ல் அப் பொறுப்பிலிருந்து கடமையாற்றினாள்.

பின்னர் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் இரண்டாவது பயிற்சி முகாமில் பயிற்சி எடுத்து இந்திய, சிறீலங்கா இராணுவங்களுடனான சண்டைகளில் கலந்து கொண்டாள். இந்திய இராணுவத்தை வெளியேற்றி சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்ததும் அரசியற் பிரிவில் பணியாற்றுமாறு அனுப்பப்பட்ட டோரா சுதந்திரப் பறவைகள் இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார். பறவை 15 இதழை வெளிக் கொணர்வதில் டோராவின் பங்கு முக்கியமானது.

1990- 11- 23 அன்று மாங்குளம் இராணுவமுகாம் தகர்ப்பில் பங்கு கொண்ட டோரா வீரச்சாவைத் தழுவிக் கொண்டாள்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

தனது கைகளில் ஆயுதத்தைத் தூக்குவதற்கு முன்பிருந்தே ஒரு சமூகப் பெண்ணாக இருந்து கொண்டு சுந்தரி சுதந்திரப் பறவைகளுக்குத் தோள் கொடுக்கத் தொடங்கினாள். வாசிப்பதிலும் எழுதுவதிலும் ஆர்வம் கொண்ட இவள் சுதந்திரப் பறவைகள் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் எழுதுவதில் ஈடுபட்டாள். ஆயுதம் ஏந்திய பெண்ணாக ஒவ்வொரு பெண்ணும் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில், ஆயுதம் தரித்து பயிற்சிப் பாசறைக்குப் புறப்படும்பொழுது தன் மன உணர்வுகளை ஒரு கடித வடிவில் எழுதியிருந்தார். இக்கடிதம் 1987 வைகாசி - ஆனி சுதந்திரப் பறவைகளில் இடம் பெற்றது. இக்கடிதம் இளம் பெண்கள் மத்தியில், வேண்டிய காலத்தில், பொருத்தமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

1987இல் ஆயுதப் பயிற்சி பெற்றுவிட்டு, இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிரான போர்க்களத்தில் நின்ற வேளை, 17. 01. 1989 இல் மாமடு என்னும் தமிழ்க் கிராமத்தில் நடாத்தப்பட்ட சிறீலங்கா இராணுவத்திற்கெதிரான தாக்குதல் சம்பவம் ஒன்றைத் தாயகம் மீட்புக்காக என்ற தலைப்பில் கவிதை வடிவில் எழுதினாள். 1989இன் தொடக்கத்திலிருந்து முடிவுவரை

தொடர்ச்சி மறுபக்கம்

சுதந்திரப் பறவைகள் ஆக்கக் குழுவில் இவள் அங்கம் வகித்தாள். 1989இல் கல்லச்சுப் பதிப்பில் வெளியான சுதந்திரப் பறவைகள் சஞ்சிகைகள் அனைத்தையும் வெளிக் கொண்டு வருவதற்காக ஆக்கங்கள் பலவற்றை எழுதுவதிலிருந்து, கல்லச்சு வேலைகளைச் செய்து சஞ்சிகைகளை வெளியிடுவதுவரை காட்டுக்குள்ளிருந்து கடும் பணியாற்றினாள்.

01.06.1989இல் வெளிவந்த சுதந்திரப் பறவைகளில் இவள் எழுதிய

இவள் தன் குடும்பத்துக்கு ஒரேயொரு செல்லப்பிள்ளை. தங்கள் உயிரிலும் மேலாகப் பெற்றோரால் நேசிக்கப்பட்டவள். வறுமையின் கோரப்பிடி அவளது குடும்பத்தைப் பாதித்தாலும் அது அவர்களது இதயத்தைப் பாதிக்கவில்லை.

**களத்திலிருந்து ஒரு கடிதம்** இலகுநடையில் தெளிந்த கருத்துடன் சுவை குன்றாமல் அமைந்திருந்தது. அக்கடிதத்தில் தன் தோழியை நோக்கி அவள் கேட்டுள்ள,

'வீட்டின் சுவர்களுடன் உன் உணர்வுகளை முட்டி மோதவிட்டு, வெளியேற முடியாமல் தவிக்கின்றாய். எவ்வளவு காலந்தான் உன் உணர்வுகளைத் திரைபோட்டு மறைக்கப் போகின்றாய்!

விடியலுக்காக சிறையை உடைக்கும் வலிமை உனக்கு ஏன் இன்னமும் வரவில்லை!

போன்ற கேள்விகள் உண்மையில் இளம் பெண்கள் சமுதாயத்தின் மீது அவள் தொடுத்த கேள்விக் கணைகளாகும். ஆனால் அக்கோள்விக் கணைகளைக் கூட எழுத்தாற்றலூடாக பசுமரத்தில் ஆணி ஏற்றுவது போல் பதிய வைத்துள்ளாள்.

எந்த இலட்சியக் கனவோடு போராட்டத்தில் தனது உயிரை அர்ப்பணித்துக் கொண்டாளோ, அந்தக் கனவு அவளின் எழுத்துக்கள்



**கப்டன் சுந்தரி**

யாவற்றிலும் ஆழ வேரோடி நிற்பதைக் காணமுடியும்.

பெண் பிள்ளை எனும் பாதிப்பு உங்களைத் தாக்காது என்றே நம்புகின்றேன். நாமும் ஆண் போராளிகளுடன் சரிநிகர் நின்றே போராடி வருகின்றோம் - இதற்கு எம் சகோதரிகளின் ஆயுதம் ஏந்திய போராட்டம் எடுத்துக்காட்டாக அமை கின்றது. நாங்கள் உங்கள் மகள் மட்டுமல்ல, இந்த இனத்தின் மகள். அதனால் கவலைகளுக்கு இடம் கொடுக்காது நீங்கள் இருக்க வேண்டும்.' என்பது போன்ற கருத்துக்களைத் தனது எழுத்தின் மூலம் வெளிப்படுத்தினாள். இவ்வாறு தனது எழுத்தாற்றல் மூலம்

இளம் சமுதாயத்துடன் நெருங்கிநின்ற சுந்தரி விதையாகி வீழ்ந்த போது, தமிழ் கவிஞன் ஒருவனால் பின்வருமாறு பாடப்பெறுகிறாள்.

**தமிழீழத்தின் தாகம் சுமந்து**
**தாவணி போடும் கனவுகள் துறந்து**
**போர்க்களம் ஆடிய பெண்புலி ஒன்று**
**களத்திலே மடிந்து**
**காவியமானாள்.**
**வேலிகள் சுற்றிய எல்லைகள் மீறி**
**வேங்கைகள் அணியில்**
**ஏறிய நிலவு.**
**நிலவாய் இருந்தவள் நெருப்பாய் எழுந்தாள்.**
**நெருப்பாய் நின்று நெருப்பிலே எரிந்தாள்.**
**கப்டன் சுந்தரி கண்ணுக்குள் நிற்கிறாள்.**
**மேடையில் நின்று முழங்கிய கோலம்**
**ஆயுதம் ஏந்திய அக்கினிக் கோலம்**
**எல்லாம் எல்லாம் எதிரே தெரிகிறது.**

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

நல்லூர் வீதி 1987 புரட்டாசி 18 ஆம் நாள் பார்க்கும் இடமெல்லாம் மனிதத் தலைகள் தான். மேடையில் திலீபன் அண்ணா. திலீபன் அண்ணாவின் உண்ணாவிரதத்தை ஆதரித்து மேடையில் பேச்சுக்கள், கவிதைகள் இடம் பெறுகின்றன. ஒரு பெண் கவிக்குரல் உண்மையை உரைக்கின்றது.

உள்ளத்தில் இருந்து அது வருகின்றது. திலீபன் அண்ணா மீண்டும் வாசிக்கச் சொல்கிறார். எல்லாப் போராளிகளும் ஏக்கத்தோடு திலீபன் அண்ணாவைப் பார்க்கச் செல்கிறார்கள். அத்தனை மக்களும் கண்ணீர் மல்க விம்முகிறார்கள். இது கஸ்தூரியின் கவிதைக்கே உரித்தான சக்தி. இந்தக் கவிதைதான் கஸ்தூரியை எமக்கு இனம்

எந்த இலட்சியக் கனவோடு போராட்டத்தில் தனது உயிரை அர்ப்பணித்துக் கொண்டாளோ, அந்தக் கனவு அவளின் எழுத்துக்கள் யாவற்றிலும் ஆழ வேரோடி நிற்பதைக் காண முடியும்.

காட்டியது.

கஸ்தூரி புலிகளின் குரல் வானொலியின் தொடர்நாடகமான **சிந்தாமணி**யில் ஆச்சியாகக் குரல் கொடுத்தாள். கலை, பண்பாட்டுப் பிரிவின் தெருக்கூத்தில் போராளியாகத் தன்னை பாத்திரமாக்கினாள். **களத்தில் காத்தான்** சிந்து நடைக் கூத்தில் இந்தியச் சிப்பாயாக வந்து எமது மக்கள் இந்திய இராணுவத்தால் பட்ட அவலங்களைத் தெளிவு படுத்தினாள். எந்தப் பாத்திரத்தைக் கஸ்தூரிக்குக் கொடுத்தாலும் அந்தப் பாத்திரம் கஸ்தூரியினால் சிறப்புப் பெற்றுத்தான் ஆகவேண்டும். இது கஸ்தூரியின் திறமையின் வெளிப்பாடு. இன்று எம் மக்கள் இந்தப் பாத்திரங்களைப் பேசிக் கொள்கின்றார்கள். அந்தக் குரலை மீண்டும் கேட்கத் துடிக்கிறார்கள்.

அடிமை இருளிலும் அறியாமைக் குகைக்குள்ளேயும் அடைபட்டுக் கொண்டிருக்கும் பெண்களுக்கு விடுதலை வேண்டும். அடுப்படிக்குள்ளேயே இருந்து அடையாளம் தெரியாமல் போன பெண்களின் அவல நிலையை இந்தச் சமூகம் அறியவேண்டும். கணவனை இழந்த பெண்ணை நிழலாகத் தொடரும் வேதனைகளை இந்த உலகம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காய் 'தீக்குளிக்கோம், தீயிட்டெரிப்போம்' என்ற நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்து மேடையேற்றிய அந்தத் திறமை அவளுக்கு மட்டும்தான் உண்டு.

இவள் சுதந்திரப் பறவைகள் இதழுக்காகப் பல கவிதைகளையும், சில



**கப்டன் கஸ்தூரி**

கதைகளையும் எழுதியிருக்கின்றாள் நிரப்பந்தங்கள், மக்களைப் பிரிந்த துப்பாக்கிகள், அவர்களுக்குத் தான் எமக்கு விடிவதில் விருப்பமில்லையே, இடம் மாறியுள்ள துப்பாக்கிகளால், சின்னப் பூக்களுடன் சில பொழுதுகள் என்ற சிறுகதைகள் கஸ்தூரியால் எழுதப்பட்டு சுதந்திரப் பறவைகளில் வெளி வந்தவையாகும். கஸ்தூரியின் கவிதைகளில் அவை வெற்றுடல்கள் அல்ல வெடி மருந்துப் பொதிகள், அக்கினிக் குஞ்சுகள், கொழுந்துக் கூடைகள், மறைந்தவர்களே நீங்கள் மலடர்கள் அல்ல, இறப்பற்றோர் என்பவை குறிப்பிடத்தக்கவையாகும். இவற்றுள் இறப்பற்றோர் என்ற கவிதையை எழுதி முடிக்க முன்னரே

11.07.1991 அன்று ஆனையிறவு ஆகாய, கடல்வெளிச் சமரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

இவள் தன் குடும்பத்துக்கு ஒரேயொரு செல்லப்பிள்ளை. தங்கள் உயிரிலும் மேலாகப் பெற்றோரால் நேசிக்கப்பட்டவள். வறுமையின் கோரப்பிடி அவளது குடும்பத்தைப் பாதித்தாலும் அது அவர்களது இதயத்தைப் பாதிக்கவில்லை.

1986 ஆம் ஆண்டு காலப் பகுதியிலே தனது பல்கலைக்கழகப் படிப்பை நிறுத்திப் புலிகளின் போராட்டப் பாதையில் பாரதி தன்னை இணைத்துக் கொண்டாள். 1987 ஆம் ஆண்டு மகளிர் படையணியின் இரண்டாவது பயிற்சி முகாமுக்காகப் பெண்போராளிகள் தெரிவு செய்யப்பட்டபோது தானும் அதில் பயிற்சி பெற முடியவில்லையே என்று பாரதி மிகவும் மன வேதனைப்பட்டாள். 'எல்லோரும் பயிற்சிக்குப் போனால் தளத்திலே நின்று வேலைகளைக் கவனிப்பதற்கும் ஆட்கள் தேவை. நீங்கள் தான் அந்தப் பொறுப்பை ஏற்றுச் செய்ய வேண்டும்' என்று லெப். கேணல் திலீபன் கூறியதற்கிணங்க, பாரதி தன் மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டாள். மகளிர் அமைப்பின் பொறுப்பாளராக இருந்து பெண்களைப் போராட்டத்துடன் இணைப்பதிலும், பெண்களது சமூக, பொருளாதார வாழ்வை மேம்படுத்தும் வேலைகளிலும் பாரதி ஈடுபட்டாள். சுதந்திரப் பறவைகளின் ஒன்பதாவது இதழை பாரதி வெளியிட்டாள்.

இந்திய இராணுவத்தை இம் மண்ணிலிருந்து விரட்டியடித்த துப்பாக்கி வேட்டொலிகளில் எல்லாப் போராளிகளையும் போல பாரதியின் துப்பாக்கியோடு சேர்ந்து அவளது பேனாவுக்கும் கணிசமான பங்கு இருந்தது.

1990 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் பொறுப்பாளராக இருந்த காலத்தில் பாரதி ஆற்றிய பணிகள் குறிப்பிடக் கூடியவை. இந்நேரத்தில் தான் இரண்டாம் ஈழப்போர் ஆரம்பித்தது. பாரதி களம் சென்றாள். இராணுக் காவலரண்களை அவதானிப்பதற்காகச் சென்று



**மேஜர் பாரதி**

கொண்டிருந்த வேளையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காலில் காயமடைந்தாள்.


மீண்டும் பெண்களின் சமூக மேம்பாட்டுக்கான வேலைத்திட்டங்களை வகுத்துச் செயற்பட்ட பாரதி விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் துணைப் பொறுப்பாளராகவும் செயற்பட்டார். எந்த வேலைகள் வந்தாலும் எழுதுவதை மட்டும் பாரதி நிறுத்தவேயில்லை. பாரதியின் எழுத்துக்களில் சூரியக் குழந்தை, பூபதிக் கோள், சிதறிப் போன சிவப்பு வல்லரசு, ஐநா. சபையே, அன்பான அம்மா போன்ற கவிதைகள் குறிப்பிடத் தக்கவை.

1992 இல் மேஜர் பாரதி சீதன ஆய்வு செய்வதற்காக வன்னிக்குப் போயிருந்த நேரத்தில், தவறுதலாக சிறு நாவற்குளத்திலுள்ள சிறீலங்கா இராணுவத்தினரின் எல்லைக்குள் பிரவேசித்த போது ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார் ✷

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆



# கடலோடிக் களம் காணும்



# பெண்புலிகள்

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் மகளிர்படையணியின் கள வரலாற்றின் புதிய அத்தியாயமாகக் கடற்புலிகள் மகளிர் படையணியின் தோற்றமும் வளர்ச்சியும் அமைகிறது. மக்கள் மத்தியில் ஆழ வேரோடிய பெண்களைப்பற்றிய மூடநம்பிக்கைகளை உடைத்துக்கொண்டு புதிய மாற்றம் ஒன்றின் திறவுகோலாய் அது படைத்துச்செல்லும் வரலாறு முன் எக்காலத்திலும் இல்லாத அபூர்வம். கடலோடு வளம் தேடிச்சென்ற உறவுகளுக்காகக் கரையில் ஏக்கத்தோடு வழிபார்த்திருந்த பெண்களைத்தான் அன்றைய வரலாற்றிற் பார்த்தோம். இன்று எங்கள் தலைவர், கடலேறி எதிரிகளோடு சமர் செய்கின்ற புதிய பெண்களை வரலாற்றிற்குத் தந்து கொண்டிருக்கிறார். ஓயாது சத்தமிட்டுக் கொண்டிருக்கின்ற ஆழக்கடலுக்குள், மக்கள் அச்சப்பட்டு நின்ற கடலுக்குள், பெண்களுக்கும் கடலுக்கும் வெகுதுரம் என்று வேலி போட்டு வைத்திருந்த கடலுக்குள் எங்கள் பெண்களை வரலாறு படைக்க வைத்தார். வெளியுலகம் நம்பமுடியாத ஆச்சரியங்களாக நிகழ்ந்து கொண்டிருக்கின்ற கடற்சாதனைக்கெல்லாம் உயிர்ப்பூட்டியவர் எங்கள் தலைவர்.

1992.03.01 அன்று கடற்புலிகள் மகளிர் படையணி தோற்றங்கொண்டது. லெப்.கேணல் நளாயினி இதன் முதற் தளபதியாக இருந்தார். ஆரம்பத்தில் முப்பதுபேரைக் கொண்டிருந்த குழுவை நளாயினி படிப்படியாகப் படையணியாக வளர்த்தார். கடலுக்குப் புதியவர்களாக, கடல்சார்ந்த எதனையுமே அறியாதவர்களாக இருந்தபெண்களை நீந்தப் பழக்கி, அவர்களை மீன்களுக்கு இணையான நீச்சற்காரிகளாக ஆக்கி, அயராது பாடுபட்டார். உடலுறையும் குளிரில், வானத்தின் உச்சியைத் தொட உயரும் அலைகளை எதிர்த்து நீந்தவைத்ததுடன் சிறந்த படகோட்டிகளாக்கிக் கடலிலே எதிரியை எதிர்க்கின்ற நிலைக்கு வளர்த்தார்.

கடற்புலிகள் மகளிர் படையணியைப் பொறுத்த வரை ஒரு குறுகிய காலத்திற்குட் கடலிலே சாதித்தவை எம் போராட்டத்தில் முக்கியமானது. சிறிய குழுவாகத் தொடங்கிப் பெரிய படையணியாக வளர்ந்துள்ள அதன் வளர்ச்சியில் அது சந்தித்த கடற்சண்டைகள் குறிப்பிட்டுக் கூறப்படவேண்டியவை.

ஆரம்பத்தில் இவர்கள்பணி கிளாலியில் மக்கள் பாதுகாப்புச் சேவையாகும். கிளாலிக்கடல் ஊடாக எமது மக்கள் சிறீலங்காவின் கடற்படையினரின் தாக்குதலுக்கு அஞ்சி உயிரைக்கையிற் பிடித்துக்கொண்டு போய்வருகின்ற சமயம் மக்களின் பாதுகாப்புக் கருதி இந் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. லெப்.கேணல் சாள்ஸ் அவர்களின் பொறுப்பில் மகளிர் படையகணிலிருந்து லெப்.கேணல் பாமா, கரும்புலி மேஜர் மங்கை முதலியோர் இதில் நின்றனர். இக்கால கட்டத்தில் நடைபெற்ற கடற்படையினருடனான பெரும்பாலான சண்டைகளிற் கடற்புலிகளின் மகளிர் படையணி பங்கேற்றது.

அதே நேரம் மணலாறு மண்கிண்டிமலை முகாம் தகர்ப்புக்காகக் கடற்புலிகள் மகளிர் படையணியின் ஒரு பெரும் அணியை மேஜர் சுகன்யா வழி நடத்திச்சென்று, சண்டையிற் கலந்து கொண்டார்.

இதன் பின்னர் யாழ் குடாநாட்டைத் துண்டாடவென நடத்தப்பட்ட 'யாழ்தேவி நடவடிக்கை'யில் கடற்புலிகள் மகளிர் படையணியின் அணி ஒன்றுடன் மேஜர் சுகன்யா கலந்து கொண்டார். இச்சண்டையில் மேஜர் சுகன்யா வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

1993.08.29 அன்று பருத்தித்துறைக் கடலில் ஒரு சப்பர் டோறா விசைப்படகு மீது மேஜர் புகழரசன், கப்டன் மணியரசன் ஆகியோர் கரும்புலித்தாக்குதலை நடாத்தினர். இத்தாக்குதலுக்கு வழியெடுத்துக் கொடுக்கும் தாக்குதலில் மகளிர் படையணி ஒரு விசைப்படகுடன் சென்று சண்டையிட்டது.

இத்தாக்குதலின் முடிவில் லெப்.கேணல் பாமா தன் தலைமையிற் படகு கொண்டு சென்று கடலில் நின்ற புலிகளுக்குத் துணையாகத் தாக்குதல் நடாத்தி மற்றைய எமது படகுகள் திரும்பி வருவதற்கு வழியமைத்துக் கொடுத்தார்.

1994.08.16 அன்று காங்கேசன்துறைத் துறைமுகத்துட் புகுந்த கடற்புலிகளின் சிறப்புப்பிரிவினர் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கட்டளைக் கப்பலைத் தாக்கி மூழ்கடித்தனர். இதில் கரும்புலியாகச் சென்று கப்பலைத் தகர்த்த முதற் பெண் கடற்கரும்புலியான கப்டன் அங்கயற்கண்ணி வரலாற்றில் இடம்பெற்றாள்.

பூநகரி இராணுவமுகாம் தாக்குதலில் நாகதேவன்துறையில் அமைந்துள்ள சிங்களக் கடற்படையின் படகுத்துறையைக் கைப்பற்றுவது, அச்சண்டை முடியும் வரை பூநகரிக் கூட்டுப்படைத் தளத்துக்குக் கடல்வழியாக உதவி கிடைக்காமற் செய்வது என்பன கடற்புலிகளின் பணியாக இருந்தன. இந்த வேலைகளில் எல்லாம் கடற்புலிகள் மகளிர் படையணியும் பங்குபற்றியது. இச்சண்டையில் லெப்.கேணல் பாமா வீரச்சாவடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் பாமா தலைமையிற் சென்ற

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

கடற்புலிகள் மகளிர் படையணியைப் பொறுத்த வரை ஒரு குறுகிய காலத்திற்குட் கடலிலே சாதித்தவை எம் போராட்டத்தில் முக்கியமானது. சிறிய குழுவாகத் தொடங்கிப் பெரிய படையணியாக வளர்ந்துள்ள அதன் வளர்ச்சியில் அது சந்தித்த கடற்சண்டைகள் குறிப்பிட்டுக் கூறப்படவேண்டியவை.

ஆரம்பத்தில் இவர்கள்பணி கிளாலியில் மக்கள் பாதுகாப்புச் சேவையாகும். கிளாலிக்கடல் ஊடாக எமது மக்கள் சிறீலங்காவின் கடற்படையினரின் தாக்குதலுக்கு அஞ்சி உயிரைக்கையிற் பிடித்துக்கொண்டு போய்வருகின்ற சமயம் மக்களின் பாதுகாப்புக் கருதி இந் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

# தீருவிலில் மூட்டிய தீயின்

## 8 வது ஆண்டு நினைவாக...



2 ம். லெப் . ஆனந்தக் குமார்




கப்டன். கரன்

**காலெடுத்துப் பாரதத்துப் பாவியர்கள் வந்தார் - எங்கள்**
**கண்ணெதிரே பன்னிரெண்டு வேங்கைகளைக் கொன்றார்**
**நெஞ்சினிலே நாங்கள் அன்று தீயை மூட்டினோம் - அந்த**
**நெருப்பினிலே வந்த பகைப் பேயை ஓட்டினோம்**




கப்டன். மிரேஷ்



கப்டன் . ரகுவப்பா



மேஜர். அப்துல்லா



லெப். கேணல். குமரப்பா



லெப். கேணல். புலேந்திரன்



லெப். தவக்குமார்




லெப். அன்பழகன்



கப்டன். நளன்



2 ம் லெப். ரெஜினோல்ட்



கப்டன். பழனி

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதற்களப்பலியான பெண் புலியின் நினைவாக.....




04-01-1967 சகாயசீலி பேதுறு 10-10-1987

ஆட்காட்டிவெளி, அடம்பன், மன்னார்

முதற் பெண்புலி நீயாகி
முன்னுரை எழுதினாய்
களப்புலியே உன்பின்னால்
ஆயிரம் கதைகள்
வேங்கையாய் வீழ்ந்ததை
வரலாறு சொல்லும்
தாங்கிய கருவி ஏந்த புதிய
கரங்கள் நீளும்



# மக்கள் உணவின்றி..

உணவு மட்டுமே வழங்கப்பட்டதாகவும் அந்தக் கப்பலில் கொண்டுவரப்பட்ட உணவுப் பொருட்கள் அனைத்தும் பங்கீட்டு முறையில் வழங்கப்பட்டுவிட்டதனால் வடக்கிற்கு உடனடியாக உணவினை அனுப்புமாறு பத்மநாபன் தனது அவசர வேண்டுகோளில் வற்புறுத்தியுள்ளார்.

இந்த வேண்டுகோளுக்கு இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை சிறீலங்கா எவ்வித பதிலையும் அளிக்காது அலட்சியம் செய்துள்ளது.

குடாநாட்டுக்கு மட்டுமல்ல தென்தமிழீழ பிரதேசத்திற்கான உணவு வழங்கலையும் சிறீலங்கா கடுமையான முறையில் தடுத்து வருகின்றது. சிறீலங்காவின் அதிரடிப்படை மட்டும் சிறு இராணுவ முகாம்கள் மூடப்பட்ட பெரும்பாலான கிழக்குப் பிரதேசங்களுக்கு சிறீலங்கா அரசு உணவு விநியோகத்தையும் கூட்டுறவுக் கடைகளுக்கு வழங்க மறுத்துள்ளது. அது மட்டுமல்ல போக்குவரத்து வசு வண்டிகள் தடுக்கப்பட்டதனால் ஐம்பதினாயிரம் விவசாயிகள் தமது விவசாய நிலங்களுக்குச் சென்று உணவு உற்பத்தியில் ஈடுபட முடியாது முடக்கப்பட்டுள்ளனர்.

யாழ் குடாநாட்டில் 1357 ஹெக்டர் நிலப்பரப்பு கடந்த ஆண்டில் விவசாயத்திற்கு உட்படுத்தப்பட்ட போதிலும் இவ்வருடம் தொடர்ச்சியான சிறீலங்காவின் ஆக்கிரமிப்புக்களினால் இது முற்றாகப் பாதிப்படைந்துள்ளது. இதனால் உணவு நெருக்கடி பாரதுரமானதமாக மாறி வருகின்றது.

இந்நிலையில் விடுதலைப்புலிகளுடனும் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் சேவையாற்றி வரும் அரச சார்பற்ற அமைப்புக்களுடனும் சர்வதேச சமூகம் நேரடியாகத் தொடர்பு கொண்டு உதவிகளை உடன் வழங்க முன் வர வேண்டுமென மனிதாபிமானத்தில் அக்கறை உள்ள அனைத்து அமைப்புக்களும் கருதுகின்றன. உணவை ஆயுதமாக்கும் சிறீலங்காவின் நடவடிக்கைகளை ஐ. நா உட்பட அனைத்து நாடுகளும் கண்டனம் செய்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசரத் தேவை தெற்காசியாவில் தோன்றியுள்ளது. இதனை உலக நாடுகள் செய்வதன் மூலமே தமிழீழ மக்களை இனஅழிப்பு செய்யமுயலும் செயற்பாட்டைத் தடுக்க முடியும் என்பது அவதானிகளின் கருத்தாக உள்ளது.

# ஐ.நா.சபைக்கு..

பயங்கரவாதச் செயற்பாடுகளைச் சுட்டிக்காட்டிய பிரசைகள் குழு, ஐநா சபைச் செயலாளர் நாயகம், சிறீலங்கா அரசு செய்யவுள்ள பாரிய இராணுவ நடவடிக்கையை நிறுத்தும்படி அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளது. சிறீலங்கா அரசு, பொருண்மியத்தடையை நீக்கி நேர்மையான முறையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்று யாழ். பிரசைகள் குழு, தமது கடிதத்தில் ஐநா சபை செயலாளர் நாயகத்தைக் கேட்டுள்ளது.

தாங்கள் எழுதிய கடிதங்களுக்கு சிறீலங்கா சனாதிபதி எவ்வித பதிலையும் இதுவரை தராத காரணத்தினாலேயே, ஐநா. சபைச் செயலாளர் நாயகத்துக்கு இக்கடிதத்தை எழுதுவதாகப் பிரசைகள் குழுத் தலைவரான, யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் குணரட்ணம் குறிப்பிட்டுள்ளார்.

# விடைபெறுதல்...

வையாக இருக்கும் மனதிற்குள் சொல்லிக் கொண்டாள். அவளுடைய அணில்களில் ஒன்று மதிலின் மீது அமர்ந்திருந்தது. அது தன்னைப் பார்ப்பதாய் ஒரு பிரமை அவளுள்ளே எழுந்தது. வண்டியை மெதுவாக ஓட்டுமாறு வசந்தியிடம் சொல்லியபடி தெருவைப் பார்த்தாள் எல்லாமே அழகாக இருப்பதாகத் தோன்றிற்று. அவர்களைக் கடந்து போகின்ற வாகனங்கள், சனங்கள், மதில்களுக்கு மேலால் பூத்திருக்கின்ற மரங்கள். எல்லாமே புதிதாய்த் தெரிந்தன. வண்டி ஒரு வளை வில் திரும்பிய போது குழந்தையொன்று குறுக்காக ஓடிற்று. அதன் சிரிப்பு பக்கத்து வீட்டுக் குழந்தையை ஞாபகப் படுத்திற்று. அதுவும் கூட இப்படித்தான் ஓடிவந்து விழுந்து விட்டால் எழுந்து நின்று சமாளிப்பதாய் சிரிக்கும். அதனுடைய முரண்பாடு அவளுள் எப்பொழுதுமே ஆச்சரியத்தைத் தோற்றுவிக்கும்.

வண்டி ஒரு சந்திக்கு வந்து வேறொரு வீதியில் திரும்பியது. வலப்புறமாயிருந்த குளத்தில் தண்ணீர் நிறையவே வற்றிப் போயிருந்தது. மங்கிய பச்சை நிறத்தில் வயல்வெளி தெரிந்தது. வீதி சற்றே வளைந்து இரண்டு கோயில்களுக்கிடையால் சென்றது. சிவன் கோவிலுக்கு முன்னாலிருந்த மைதானத்தில் சிலர் விளையாடிக் கொண்டிருந்தார்கள். வண்டி ஒரு சீராக ஓடிக்கொண்டிருந்தது. பல்கலைக்கழகத்தை அண்மிப்பதை உணர்ந்து கொண்டவள் தான் பேச வேண்டியவற்றை மனதினுள் குறித்துக் கொண்டாள்.

அவர்கள் போய்ச் சேர்ந்த போது நிகழ்ச்சி ஆரம்பமாவதற்குச் சில நிமிடங்கள் இருந்தன. தெரிந்த முகங்கள் பலவற்றைச் சந்திக்க முடிந்தது. தன்னைத் தவிர எல்லோருமே சாதாரணமாய் இருப்பதாகப் பட்டது. அரங்கு முழுவதும் சனங்கள் நிரம்பியிருந்தார்கள். மாணவர்கள் பலர் உயர்ந்த சுவரின் யன்னல் நிலைகளில் அமர்ந்திருந்தார்கள். எல்லோருடைய குரல்களும் சப்தங்களின் கலவையாய் காதில் விழுந்தன. இலேசாய் தலையை நிமிர்திதிய போது கூரையிலிருந்த சிலந்தி வலை சட்டென்று வீட்டை ஞாபகப் படுத்திற்று. பிடிவாதமாய் அந்த ஞாபகங்களை விலக்கினாள் மௌன அஞ்சலியின் போது பழகிப் பிரிந்த முகங்கள் மீண்டும் ஞாபகத்தைத் தாக்கின. இந்த அவஸ்தை புதிதாக இருந்தது. அவளுள்ளிருந்து ஏதோ ஒன்று விரைவில் வெளியேறத் துடித்தது

நிகழ்சிசியில் இப்போது உரைகள் ஆரம்பமாகியிருந்தன. அவள் சனங்களையே பார்த்துக் கொண்டிருந்தாள் எல்லோரும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள் எல்லாக் கண்களிலும் ஒரு நம்பிக்கை தேங்கியிருந்தது. உரைகளுக்கிடையே ஒலி நாடாவை வெளியிட்டு வைத்தார்கள் அதிலுள்ள பாடல்களும் இனி எல்லா இடங்களிலும் ஒலிக்க ஆரம்பிக்கும். அவை தான் எத்தனை சேதிகளைச் சுமந்து வருகின்றன. சிந்தனையைத் தடை செய்வதாய் அவள் பெயர் அழைக்கப்பட்டது.

எழுந்து மேடையின் பின்புறமாய் ஒலிவாங்கியை நோக்கி நடந்தாள். மனதினுள் குறித்துக் கொண்டவைகளை ஒழுங்கு படுத்திக் கொண்டாள். மெதுவாய் ஆரம்பித்த போது வார்த்தைகள் சிரமத்துடன் வந்தது. அத்தனை கண்களும் தன்னை நோக்கிக் கொண்டிருந்ததைக் கண்டாள் இது புதிய அநுபவமில்லைத்தான். ஆனாலும் அவளால் ஒரே சீராகப் பேசச் சிரமமாய் இருந்தது. பார்வையை சனங்களிலிருந்து திருப்பிக் கொண்டாள்.

மேடையின் வலது பக்கமாக கறுப்பாய், உயரமாய் ஓர் இளைஞன் ஒலிப்பதிவு செய்து கொண்டிருந்தான் அவனுடைய முகம் கூடப் பரிச்சயமானதாயிருந்தது. புருவங்கள் சுருங்கியவனாய் இவளையே பார்த்துக் கொண்டிருந்தான். இவளுடைய சிரமம் அவனுள் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். பிரிவென்பதை இப்போது தான் மிகவும் பாரதுரமானதாய் அவள் உணர்நதாள். அத்தனை பேரையும் தன் உயிரோடு தழுவிக் கொள்ள வேண்டும் போல் ஒரு துடிப்பு எழுந்தது. விரைவாக விடைபெற்றுக் கொண்டு தனது இருக்கைக்கு வந்தவளை அநேக முகங்கள் உற்றுப் பார்த்தன. அடுத்த உரை ஆரம்பமாயிற்று. வெளியே பொழுது சாய்ந்து கொண்டிருந்தது.

நிகழச்சி முடிந்ததும் அவளால் உடனே புறப்பட முடியவில்லை. பலருடன் கதைக்க வேண்டியிருந்தது. வசந்தி வண்டியுடன் காத்திருப்பது தெரிந்தது. உள்ளேயிருந்த பாதையில் நடக்க ஆரம்பித்தாள். வலப்புறமாய் மைதானமும் புல்வெளியும் கோவிலின் முன்னே பரந்திருந்தன. ஆங்காங்கே மரங்களின் கீழே பலர் அமர்ந்திருந்தார்கள். சூரியன் முழுதாய் மறைந்திருந்தது. கடைசி மஞ்சள் வெயில்

எஞ்சியிருந்தது. கூடி நின்றவர்களிடம் சிரிப்போடு தலையசைத்து வண்டியில் ஏறிக் கொண்டாள். மீண்டும் ஒருமுறை எல்லாவற்றையும் பார்த்து விட்டுத் தலையை நிமிர்த்தினாள். மேலே வானம் விரிந்திருந்தது. முகில்கள் சிவப்பாகியிருந்தன. தென் மேற்குத் திசையில் கறுப்பாய் நான்கு பறவைகள் ஏதோ ஓர் இலக்கு நோக்கிப் பறந்து கொண்டிருந்தன ✷

# ஐப்பசி முடிவுக்குள்...

அறிய வருகிறது. இதற்காக எத்தகைய கொடூரமான இராணுவ வெறியாட்டத்தை சிறீலங்கா இராணுவம் நடாத்தினாலும் அதை அரசியல் ரீதியாக நியாயப்படுத்த சந்திரிகா அரசாங்கம் ஒப்புதல் அளித்ததன் பின்னரே சிறீலங்கா இராணுவம் கோவில்கள், பள்ளிகளிலெல்லாம் வெளிப்படையாகக் கொடிய தாக்குதலை நடாத்துகின்றது எனக் கொழும்பு அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதன் அடிப்படையிலேயே நவாலி தேவாலயப் படுகொலையைத் தனது படைகள் செய்யவில்லை எனச் சிறீலங்கா ஜனாதிபதி மறுத்து வருகிறார். தற்பொழுது நாகர்கோவில் மாணவர் படுகொலைகளையும் திரிபுவாதம் செய்யும் சிறீலங்கா இராணுவப் பேச்சாளர், அப்பாடசாலையில் நடைபெற்ற கடற்புலிகளின் கூட்டத்தையே தாம் தாக்கியதாகவும், இறந்தவர்களது சீருடைகளைக் கொண்டு விடுதலைப்புலிகள் அவர்களை மாணவர்களாக இனம் காட்டுவதாகவும் அப்பட்டமான பொய்யை வெளியிட்டுள்ளார்.

சந்திரிகா, சிறீலங்கா ஜனாதிபதி என்ற முறையிலும், சிறீலங்காப் படைகளின் தலைவர் என்ற முறையிலும் நடைபெற்ற இச்சம்பவங்களுக்கு அனுதாபம் கூடத் தெரிவிக்காதுள்ளமை சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களைத் தனது குடிகளாக ஒருபொழுதும் கருதுவதில்லை என்ற உண்மையை மேலும் தெளிவாக்கியுள்ளது.

சிறீலங்காவில் சர்வாதிகாரம் தலைதுக்கியுள்ளமையை, பாப்பரசர் உட்பட உலக நாடுகளின் தலைவர்கள், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் நவாலிப்படுகொலைகளுக்குக் கண்டனம் தெரிவித்த பின்னர் இடம்பெற்ற மாணவர்மீதான தாக்குதல், மற்றும் உணவு வழங்கலை ஆயுதமாக்கி மக்களை இன அழிப்புச்செய்தல் போன்ற சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. சர்வதேச அபிப்பிராயம் எதையும் ஏறெடுத்துப்பார்க்கும் நிலையில் சந்திரிகா அரசாங்கம் இல்லை.

சிறீலங்கா ஜனாதிபதி, படைகளின் தலைவர் என்ற முறையில் இனஅழிப்புக்கு அனுமதி வழங்கி, அதேவேளை அரசியல் தீர்வில் நம்பிக்கை உடையவர்போல் அரசியல் தீர்வு யோசனைகள் பற்றிப் பேசி வருகிறார். இது ஒரு நரித்தந்திரம் எனவும் நவீன ஆயுதங்களும் அறுபத்தேழாயிரம் படையினரும் வடக்கில் குவிக்கப்பட்டு அக்டோபர் முடிவதற்குள் அடுத்த பெரும் போர் ஒன்றைத் தொடங்க சந்திரிகா அரசு முழு அளவிலான ஆயத்தங்களைச் செய்கிறதெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கிடையே 'முன்னோக்கிப் பாய்தல்' முதல் 'இடிமுழக்கம்' வரை விடுதலைப்புலிகளிடம் பலத்த இழப்புக்களை அடைந்துள்ள சிறீலங்கா இராணுவஅணிகள், போர் செய்வதற்கான உளவியல் வலிமையின்றித் தடுமாறுவதாகவும், கடல்வழி விநியோகத்தைக் கடற்புலிகள் முற்றாகத் தடுத்து வருவதினால் பெரும்போரைத் தொடங்கினால் தாம் புலிகளின் பொறிக்குள் சிக்குண்டுவிடலாம் எனும் அச்சத்தினால் போரை, பெரும்போராக்காது தாக்கியழித்தல் நடவடிக்கையாகவே நடாத்த வடக்கிலுள்ள படையினர் விரும்புவதாகவும், இதனால் சிறீலங்கா இராணுவ உயர்பீடம் எவ்வித முடிவும் எடுக்கமுடியாது தடுமாறுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# மட்டக்களப்பில்...

ஒரு 'பவள்' கவச வாகனம் முற்றாக சேதமடைந்தது.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் பின்வருமாறு:-

அன்கர் 38 கொம்பட் 1

கோல் கொமாண்டோ 4

ஏ.கே. ரக துப்பாக்கி 3

40 எம்.எம். எஸ்.எம்ஜி 18

கோல் கொமாண்டோ மகசீன் 7

'5656" ரவைகள் 375

ஐ.எஸ் ரவைகள் 50

கைக்குண்டுகள் 3

ரோந்து சென்ற இவ் அதிரடிப்படையினர் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதலின்போது, விடுதலைப் புலிகள் தரப்பில் 3 போராளிகள் வீரச்சாவடைந்தனர். வீரச்சாவடைந்த மாவீரர்களின் விபரம்: மேஜர் ஆரமுதன் (கறுவல்தம்பி சிவநாதன், மட்டுநகர்), கப்டன் சத்தியவீரன் (அழகரட்ணம் அமிர்தலிங்கம், மட்டுநகர்), வீரவேங்கை செல்வக்காந்தன் (வெள்ளைக்குட்டி புவீந்திரராசா, மட்டுநகர்). இம் மாவீரர்களுக்கு எமது வீரவணக்கம்.

இதேவேளை, அனுராதபுரம் பகுதியில் கடந்த 10.10.1995 செவ்வாய் அன்று விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் 2 ஊர்காவற் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் 4 இராணுவத்தினரும் பலியாகியுள்ளனர். சில ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

# கடலோடிக் களம் காணும்...

படகு, எதிரியின் ஒரு நீருந்து விசைப்படகைக் கைப்பற்றியது வரலாற்று நிகழ்வு.

சாகரவர்த்தனா ஆழ்கடல் ரோந்துக் கப்பல் மீதான தாக்குதல் முக்கியமானது. இத்தாக்குதலில் மகளிர் படையணி தனிப்படகோடு சென்று சண்டையிட்டதுமன்றி, மகளிர்படையணியின் சிறப்புத்தளபதியான நளாயினி, கடற் கரும்புலியாய் வீரச்சாவைத் தளுவிக்கொண்டார். சிங்கள அரசுக்குப் பலத்த அடியைக் கொடுத்த இத்தாக்குதலில் எமது தரப்பில் லெப். கேணல் நளாயினி, மேஜர் மங்கை, கப்டன் வாமன், கப்டன் லக்ஷ்மன் ஆகியோர் வீரச்சாவடைந்தனர். இக்கப்பலின் கப்டன் கொமாண்டர் அஜித்குமார போயாங்கொட சிறைப்பிடிக்கப்பட்டார்.



மேஜர் வைதேகி

இத்தாக்குதலைப் பற்றி எமது தலைவர் சொன்ன 'சிறீலங்கா கடற்படையின் ஒரு கப்பற் தளபதியைத் தமிழீழக் கடற்படையின் ஒரு பெண் தளபதி சிறைப்பிடித்தார். அவர் உயிரை க்காக்கச்

> சிறிலங்கா கடற்படையின் ஒரு கப்பற் தளபதியைத் தமிழீழக் கடற்படையின் ஒரு பெண் தளபதி சிறைப்பிடித்தார். அவர் உயிரைக்காக்கச் சரணடைந்தார். இவர் வெற்றியைப்பெற உயிர் துறந்தார்" என்ற வரிகள் எமது பெண்கள் போராட்ட வரலாற்றிற் பெண்களது மிகப்பெரிய வளர்ச்சியைக் காட்டி நிற்கின்றது.

சரணடைந்தார். இவர் வெற்றியைப்பெற உயிர் துறந்தார்' என்ற வரிகள் எமது பெண்கள் போராட்ட வரலாற்றிற் பெண்களது மிகப்பெரிய வளர்ச்சியைக் காட்டி நிற்கின்றது.

லெப். கேணல் நளாயினியின் வீரச்சாவைத் தொடர்ந்து,



கடற் புலிகள் மகளிர் படைய ணியின் சிறப்புத் தளபத-ியாக லெப். கேணல் மாதவி பொறுப்பேற்றார். இதனைத்தொடர்ந்து மகளிர் படையணி சந்தித்த சண்டைகளில் வெற்றிலைக்கேணியிற் தரித்து நின்ற 'ஓசன் றேடர்' என்ற விநியோகக் கப்பல் மீதான வழிமற-ித்துத் தாக்குதலிற் கடற் கரும்புலிகள் மகளிர் படையணி பங்குபற்றியது.

1994.11.08 அன்று கடற் கரும்புலி மேஜர் வித்தியால் மேற்கொள்ளப்பட்ட 'பபதா' என்ற தரையிறங்கும் கடற் கலம் மீதான தாக்குதலில் 'பபதா' கப்பலுக்குப் பாதுகாப்பு வழங்கி வளைத்து வந்த டோறா படகுகளுடன் நடந்த சண்டையிற் பெண் போராளிகள் பங்குபற்றினர்.

இத்தாக்குதலுக்கான வேவு நடவடிக்கையிலும் பெண் போராளி ஒருவரே ஈடுபட்டார். அதற்காகத் தலைவரினால் இவருக்கு உந்துருவி ஒன்று பரிசாக வழங்கப்பட்டது.

மூன்றாவது கட்ட ஈழப்போரின் முதலடியாய் 1995.04.19 அன்று திருமலையில் இடம் பெற்ற சூரயா, ரணசுறு என்னும் அதிவேக பீரங்கிக் கப்பல்கள் மீதான தாக்குதலில் மகளிர் படையணித் தரப்பிற் கடற்கரும்புலி மேஜர் மதுஷா, கப்டன் சாந்தா ஆகியோர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

முற்றுமுழுதாகப் பகைவனின் பாதுகாப்புப் பொருந்திய திருமலைத் துறைமுகக் கடலில் 'நீரடி நீச்சலாய்' நீண்ட மைல்கள் நீந்திப் போய் இவ்விரு கப்பல்களும் தாக்கப்பட்ட விடயம் சிங்கள அரசுக்குப் பலத்த அடியைக் கொடுத்த நிகழ்வாகும்.

பின்னர் இடம்பெற்ற மண்டைதீவுச் சண்டையிற் கடற்தாக்குதலுக்கெனவும், விநியோக வேலைகளுக்கெனவும் கடற் புலிகள் மகளிர் படையணி பங்குபற்றியது.

காங்கேசன்துறைத் துறைமுகத்தினுள் அண்மையில் 'புலிப்பாய்ச்சல்' இராணுவ நடவடிக்கையின் ஒருபகுதியாக நிகழ்ந்த 'எடித்தாரா' மீதான கரும்புலித் தாக்குதலுக்கு லெப். கேணல் மாதவி ஒரு படகின் கொமாண்டராகச் சென்று கரும்புலித்தாக்குதலுக்கு வழி செய்து கொடுத்தார். இதுவரைகாலமும் நடாத்தப்பட்டவற்றுள் வித்தியாசமான தாக்குதலாக இது அமைந்தது. இத்தாக்குதலிற் கடற் கரும்புலி கப்டன் தமிழினி, கடற் கரும்புலிகள் மகழிர் படையணியின் சிறப்புத்தளபதி மாதவி உட்படப் பதினொரு பெண் போராளிகள் வீரச்சாவடைந்தனர். தமிழீழ விடுதலைப் போரில் மிகப்பெரிய கடற்போராக இது அமைந்தது. பகைவனின் துறைமுகத்துக்குள்ளே புகுந்து நேரடி மோதலாகவும், கரும்புலித்தாக்குதலாகவும் நடத்தப்பட்ட தாக்குதல் இது. அண்மையில் மணலாற்றிலுள்ள ஐந்து இராணுவ முகாங்களின் மீதான தாக்குதலின் போது கடற் புலிகள் மகளிர் படையணி பங்குபற்றியது. விநியோக வேலைகளுக்கென ஒரு பக்கமாகவும், தரைச்சண்டைக்கென மறுபக்கமாகவும் பங்குபற்றினர். தரைச்சண்டையிற் கடற் புலிகள் மகளிர் படையணியின் துணைத்தளபதி மேஜர் வைதேகி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

ஒட்டுமொத்தமாகக் கடலிற் பெண் புலிகளின் வளர்ச்சியானது ஒரு புதிய பரிமாணம். சமூகம் சார்ந்த மரபுகளை உடைத்துக் கொண்டு, சமூகத்தின் நம்பிக்கையீனங்களைப் பொய்யாக்கிக் கொண்டு இன்று எமது பெண்கள் உலகத்துக்குப் புதியதொரு நம்பிக்கையைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

அதிலும் பெண் கடற் புலிகளின் சாதனையானது உலகின் கண்களை வியப்பால் விரியவைத்த நிகழ்ச்சி, பெண்களின் ஆயுதப் போராட்ட வரலாற்றில் இதுவரை எட்டாத உச்சக்கட்ட வளர்ச்சியாகும். அந்த வளர்ச்சியிற் தமிழீழம் நாளைய உலகப்படத்திற் பெருமையுடன் சுட்டிக்காட்டப்படும் என்ற நம்பிக்கையோடும், எங்களைத் தாலாட்டும் நீலக் கடலலைகளிற் தாவி எம் எதிரிகளை வெற்றிகொள்வோம் என்ற உறுதியோடும் ஆயிரமாயிரமாய் எழுவோம்.

## சந்திரிகாவிற்கு ஒரு பதில்

அண்மையில் யாழ்ப்பாணம் வந்து சென்ற ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்ட மனிதநேய ஆலோசகர் றோலண்ட் கட்சன் தமிழ் மக்களின் இன்றைய நிலைப்பாடு - அவர்களின் உணர்வுகள் என்பனவற்றை உலகிற்குத் தெளிவாகவே வெளிக்காட்டியுள்ளார். இவை சிறீலங்கா அரசு, தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்தும் - விடுதலைப் புலிகள் குறித்தும் மேற்கொள்ளும் பிரசாரங்களின் போலித்தனத்தை உலக றியச் செய்யக்கூடியவையாகவுள்ளன.

'தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பதை தமிழ் மக்கள் நடத்தவில்லை. அது விடுதலைப் போராட்டமும் அல்ல. 'பயங்கரவாத' இயக்கமான விடுதலைப் புலிகளால் நடத்தப்படும் 'பயங்கரவாத' நடவடிக்கைகளே அவை' இதுவே தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்த சிறீலங்கா அரசின் முதன்மைப் பிரசாரமாகும்.

'விடுதலைப் புலிகள் இயக்கமானது ஆயுதமுனையில் தமிழ் மக்களை மிரட்டிப் பணிய வைத்துள்ளது. தமிழ் மக்கள் விடுதலைப் போராட்டம் எதையும் நடத்தவில்லை. சிறீலங்கா அரசுடனேயே சேர்ந்து வாழ விரும்புகின்றனர்' என்பது அடுத்த முக்கிய அம்சமாகும்.

இந்நிலையில், 'விடுதலைப் புலிகளின் பிடியில் சிக்கியுள்ள தமிழ்மக்களை மீட்கவே இராணுவ நடவடிக்கை. போர் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல, விடுதலைப் புலிகளுக்கு மட்டுமே எதிரானது. இவை யாவற்றையும் சேர்த்ததே சிறீலங்கா அரசின் பிரசார வடிவமாகும்.

ஆனால் அரசின் இவ்வாறான பிரசாரம் யாவற்றையும் அண்மையில் யாழ். வந்து திரும்பிய ஐநா அதிகாரியின் கூற்றுக்கள் தெளிவாகவே நிராகரித்துள்ளன. அவர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமிழ்மக்களின் ஈடுபாடு, விடுதலைப்புலிகளுடன் மக்களுக்குள்ள நெருக்கம் என்பனவற்றைத் தெளிவாகவே சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை 'ரொய்டர்' செய்தியாளருக்கு அவர் தெரிவித்த கருத்துக்கள் தெளிவாகவே உணர்த்துகின்றன. பட்டினியால் வாடும் தமிழின மக்கள் புலிகளுடன் சேர்ந்து இராணுவத்திற்கு எதிராகப் போரிடவும் இனவாதப் போரை ஒரு முடிவிற்குக் கொண்டுவருவதற்கும் தீவிரத்துடன் இருப்பதாகவும் யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் ஆயுதப்படையினரின் மீது பாரிய தாக்குதல்களை நிகழ்த்தவும் தயாராகும் அளவிற்கு ஆத்திரம் அடைந்துள்ளனர் எனவும் தனது கணிப்பை வெளியிட்டார்.

ஐநா. அதிகாரியின் இக்கூற்றுக்கள், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமிழ் மக்கள் எவ்வளவு உறுதியாக உள்ளனர் என்பதை வெளிக்காட்டுவதோடு, தமிழ் மக்களைப் பட்டினி போட்டோ அன்றி இராணுவ அழுத்தங்கள் மூலமோ பணிய வைத்து விட முடியாது என்பதையும் வெளிக்காட்டும் அம்சங்கள் எனலாம். மாறாக, பட்டினியும் இராணுவ அழுத்தங்களும் மேலும் மேலும் அவர்களைப் போராடவும் இனப்பிரச்சனைக்கு ஓர் நிரந்தர தீர்விற்குச் செல்லவும் தூண்டும் என்பதையுமே காட்டுவதாய் உள்ளது.

அத்தோடு, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் பக்கமே நிற்கின்றனர். அவர்களுடன் சேர்ந்து போராடவே தயாராகவுள்ளனர் என்பயையும், புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் வேறுபாடு காணமுடியாது என்பதையும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். ஆகையினால் சந்திரிகா அரசு கூறுவது போன்று தமிழ்மக்கள் வேறு, புலிகள் வேறு என்பது யதார்த்த நிலைக்குப் புறம்பானது என்பதும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஐநா. அதிகாரியின் இக் கருத்துக்களானது கற்பனையின் அடிப்படையில் - வெறும் ஊகங்கள் ரீதியில் எழுந்தவையல்ல. யாழ் வந்த பின்னர் நன்கு ஆராய்ந்து அறிந்த பின்னர் வெளியிடப்பட்ட கருத்துக்கள் ஆகும். போரினால் பெரும் இன்னல்களுக்கும், இழப்புக்களுக்கும் உள்ளான மக்களைச் சந்தித்துப் பேசியதன் பின்னர் தெரிவித்த கருத்துக்கள் ஆகும்.

இந்நிலையில் சந்திரிகா அரசானது யதார்த்த நிலையைப் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும். அதாவது அரசு நடத்தும் போர் என்பது தமிழ்மக்களுக்கு எதிரான போரே ஒழிய, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் எனப் பாகுபடுத்திப் பிரித்துப் பார்க்கக் கூடியதல்ல என்பதும், இராணுவ நடவடிக்கை மூலமோ அன்றி பட்டினி போடுவதன் மூலமோ தமிழ் மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை நிறுத்திவிடலாம், தோற்கடித்துவிடலாம் என எண்ணுவதும் தவறானதாகும்.

ஆனால் இதனைத் தனியாகச் சந்திரிகா அரசு மட்டுமல்ல, வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அவருக்கு ஆதரவளிப்பவர்களும் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது வடக்கு-கிழக்கில் நடப்பவை பயங்கரவாத நடவடிக்கை ஒன்றல்ல, தமிழீழ விடுதலைப் போராட்டமே. போராடுபவர்கள் தனியாக விடுதலைப் புலிகள் மட்டுமல்ல, அவர்களின் பின்னால் தமிழினமே உள்ளது என்பது ஆகும்.

# யூதர்களிடம் மண்டியிடும் பாலத்தீனியர்கள்


## தாயக மண் மீட்புப் போரில் வெற்றி பெறாததால்...

பேச்சவார்த்தைகள் நடந்துவதில் இப்போது உலக சாதனையை யூத-பாலத்தீனிய தரப்பினர் படைத்து வருகின்றார்கள். கடந்த யூலை மாதம் 1ம் நாள் நள்ளிரவு ழுழுவதுமே 10 மணித்தியாலத்திற்கு மேலாக யாசீர் அரபாத்தும் இசரேலிய வெளிநாட்டமைச்சர் சிமோன் பெரசம் தமக்குத் தாமே விதித்துக் கொண்ட யூலை 1ம் திகதி காலக்கெடுவிற்குள் உடன்பாடொன்றைக் காண்பதற்காகவே, இவ்வாறு மரதன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர். ஆனால், பேச்சவார்த்தைகள் முடிந்து களைப்படைந்த நிலையில் இருவருமே செய்தியாளர்களைச் சந்தித்தபோது பெரஸ் கூறினார்-



'பாலத்தீனிய தன்னாட்சி விரிவுபடுத்தலுக்காக நாம் ஒருபோதும் இசரேலின் பாதுகாப்பை விட்டுக்கொடுக்கமாட்டோம்'

அரபாத்தோ பேச்சுக்கள் 'மிகச்சிக்கலான மிக இக்கட்டான நிலையிலுள்ளது' என்றார். 'பேசுவோம் மீண்டும் பேசுவோம்' எனக்கூறி இருவரும் பிரிந்தனர். பாதுகாப்பென்று இசரேலியத் தரப்பில்கூறப்பட்டுவருவது, யூன் 1967-ம் ஆண்டு ஆறுநாள் போரின் போது யோர்தானிடம் இருந்து இசரேல் கைப்பற்றிய பாலத்தீன மேற்குக் கரைப்பகுதியிலிருந்து இசரேலிய இராணுவத்தை இடம்மாற்றுவது தொடர்பான சிக்கல்களையே குறிக்கின்றது. இப்போது என்ன நடக்கின்றது என்றால், காசாவிலும் மேற்குக்கரையிலும் பாலத்தீனிய மக்கள் இசரேலிய இராணுவத்தை விலக்குமாறு வேண்டி உணர்வு பூர்வமான பாரிய பேரணிகளை நாள்தோறும் நடாத்துகின்றனர். அதே வேளை யூதர் தரப்பிலும் இராணுவத்தை மேற்குக்கரையிலிருந்து அகற்றக்கூடாதென மூர்க்கத்தனமான வகையில் பேரணிகள் நடத்தப்படுகின்றன. ஏனெனில் இராணுவம் இருந்தால்தான் யூதரால் பாலத்தீன தாயகத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்கள் பாதுகாக்கப்படும். எனவே பாலத்தீனிய சிக்கலின் மையமான 'மண் பறிப்பு' என்பதை, 'மண் மீட்புப் போராட்டமொன்றால் முறியடிக்க முடியாத பாலத்தீனியர்' இப்போது பெரும் சிக்கலை எதிர்நோக்குகின்றனர்.



**இப்போது பேசப்படுகின்ற அமைதி என்பது நல்லோருடையதோ, வல்லோருடையதோ அல்லது அறிவாளர்களினதோ அல்ல. இது களைத்துப் போனவர்களின் அமைதி**

## காற்றில் பறக்கும் உடன்பாடு.

தற்போதைய சிக்கலின் பின்னணியைச் சற்று விளங்கிக் கொள்வதற்கு, நோர்வேயின் ஒஸ்லோ நகரில் உருவாகி 1993 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13ம் நாள் மாலைப் பொழுதில் வெள்ளை மாளிகை முன்றலில் கிளின்டனின் முன்னிலையில், அரபாத்தும் இசரேலிய பிரதமர் இட்சாக் றபினும் கைச்சாத்திட்ட உடன்பாட்டின் விதிகட்குச் செல்ல வேண்டும். 5 வருட காலத்தை உள்ளடக்கிய அமைதிக்கான நிகழ்ச்சி நிரலை கால அட்டவணையாகக் கொண்ட உடன்பாட்டின் விதிகளே, இன்று விவாதத்திற்குரியதாகி விட்டன.

இதுவரை நடந்தது காசா, யெரிக்கோ பகுதியில் இடைக்கால பாலத்தீனிய தன்னாட்சி மன்றொன்று நிறுவப்பட்டதேயாகும். ஆனால், இவ்வுடன்பாட்டின் பிரதான மையமான ஏற்பாடு மேற்குக்கரைப்பகுதிக்குத் தன்னாட்சியை விரிவுபடுத்தல், பாலத்தீனிய நாடாளுமன்றம் எனப்படக்கூடிய தேசியசபைக்காக முழுப்பாலத்தீனியப் பகுதிகளிலும் (படம் பார்க்க) தேர்தல் நடத்தல், அத்தோடு இத்தேசிய சபையின் வடிவம், அதன் சட்டமியற்றும் அதிகாரங்கள், நிறைவேற்று அதிகாரங்கள், தனியான நீதிமுறை பற்றிய ஏற்பாடுகள் ஏற்கனவே தன்னாட்சி மன்றுக்கு வழங்கப்பட்ட ஐந்து துறைகட்குப் புறம்பாக (கல்வியும் பண்பாடும், சுகாதாரம், சமூக நலன், சுற்றுப்பயணத்துறை, நேரடி வரிகள்) வழங்கப்பட வேண்டிய எட்டுத்துறைகள் (வேளாண்மை, அஞ்சல்துறை, எரிபொருள், வாயுத்துறை, தொழிலாளர்நலன், வணிகம், கைத்தொழில், உள்ளூராட்சி, புள்ளிவிபரம்) போன்றவை பற்றிய முடிவுகள் எடுத்தல், அத்தோடு ஏற்கனவே காசா, யெரிக்கோ நகரத்திலிருந்து விலக்கப்பட்ட இசரேலிய இராணுவம் மேற்குக்கரை பாலத்தீனிய மக்கள் வாழ்விடங்களிலிருந்து விலக்கப்பட்டு வேறிடங்களில் நிலைகொள்ளச் செய்யப்படல், (அதன் பின் இசரேலிய இராணுவத்தின் பணி இசரேலிய குடியேற்றங்களைப் பாதுகாத்தலாகவே இருக்கும் ) இவற்றோடு கிழக்கு யெருசலெமிலுள்ள பாலத்தீனியர் இத்தேர்தலில் வாக்களிக்கவும் தேர்தலில் நிற்கவும் வசதிஅளித்தல் போன்றனவே இம்முக்கிய ஏற்பாடுகள். இவை யாவும் நிறைவேற்றப்பட விதிக்கப்பட்ட காலக்கெடு, யூலை 13 1994ம் ஆண்டாகும். ஆனால் இப்போது ஒரு வருடம் கடந்தும் ஒன்றும் முழுமைபெறவில்லை. சென்ற மார்ச் மாதம் இரு தரப்பினரும் இவ்விடயங்கள் பற்றி இறுதி முடிவெடுக்க, யூலை 1ம் திகதியை காலக்கெடுவாகத் தமக்குத்தாமே விதித்தனர். ஆனால், இப்போது அக்காலக் கெடுவும் தாண்டிய பின் இசரேலியத் தரப்பில் மேற்குக்கரையிலிருந்து இராணுவத்தை விலக்கத் தயக்கம் காட்டப்படுவதோடு, அவ்வாறு விலக்கினாலும் தேர்தல்முடிந்தபின் மீண்டும் முன்னைய இடங்கட்கு இராணுவம் திரும்பவும் சென்று நிலை கொள்ளப்படும் என வலியுறுத்தப்படும் அடாவடித்தனம் நிகழ்கின்றது.



## அரபாத்துக்கு இறுதிச் சந்தர்ப்பம்.

இத்தகையதொரு நிலைப்பாட்டை மேற்கொள்ள இசரேலியத்தரப்பில் கூறப்படும் காரணம், பாலத்தீனிய- யூத உடன்பாட்டை எதிர்க்கும் கமாஸ், ஜிகாத் போன்ற இசுலாமிய வாதக்குழுக்கள் இசரேலியர்க்கு எதிராக மேற்கொள்ளும் தற்கொலைத் தாக்குதல்களும், அதைத் தடுக்கும் வகையில் பாலத்தீனிய காவல்துறை செயற்படவில்லை என்பதுமேயாகும். உடன்பாட்டின் பின், யூதர் என்றுமே சந்திக்காத மோசமான சிறுதாக்குதல்கள் பாலத்தீனியத்தரப்பில் மேற்கொள்ளப்பட்டது. புள்ளி விபரம் ஒன்றின்படி, உடன்பாட்டிற்கு முன் 1987ம் ஆண்டு தொடங்கிய பாலத்தீனிய மக்கள் கிளர்ச்சியான (Intifadeh) இன்ரிபாதாவின் போது கொல்லப்பட்ட யூதர் தொகை வெறுமனே 161 ஆகும். ஆனால் உடன்பாடு கைச்சாத்தானபின் 20 மாதங்கட்குள் கொல்லப்பட்ட யூதர் தொகை 123 ஆகும். இவ்வாறாகச்சுட்டிக்காட்டி நெருக்கடியை உருவாக்குவதன் மூலம் இசரேலியத்தரப்பினர், பாலத்தீனியர் தமக்குள்ளே மோதி அழிவர், அதனால் உடன்பாட்டினை நடைமுறைப்படுத்தலையும் பெரிதும் பின்தள்ள முடியும் என எண்ணினர். தொடக்கத்தில் அப்படி ஒரு நிலை இருந்த போதும் இப்போது அவ்வாறில்லை. மாற்றமொன்று தென்படுகின்றது. கடந்த நான்கைந்து மாதங்களாக கமாஸ், ஜிகாத் இயக்கத்தினரின் தாக்குதல்கள் பெருமளவு குறைந்து விட்டன. பாலத்தீனிய விடுதலை அமைப்பின் ஏனைய உறுப்பினராக இருக்கும் வேறு இயக்கங்கள் அமைதிகாக்கின்றன.

பாலத்தீனத்தின் மூத்த விடுதலை அமைப்பான அல்பாத்தாவை உருவாக்கியவரும் 50க்கு மேற்பட்ட கொலை முயற்சிகளிலிருந்து தப்பிப் பிழைத்தவரும் தற்போது மிதவாதியாகியும் விட்ட யாசீர் அரபாத், தான் இன்னமும் முழுமையாக போராட்ட உணர்வினைக் கைவிடவில்லை என்றும் தனக்கு ஒரு சந்தர்ப்பம், கால அவகாசம் தரப்படவேண்டுமென்கின்ற அடிப்படையில் பல்வேறு குழுக்களோடு பேச்சுக்கள் நடத்தி தற்காலிக இணக்கமொன்றிற்கு வரமுயல்வதாகத் தெரிகின்றது.

பாலத்தீனிய விடுதலை அமைப்பின் ஏனைய முக்கிய அமைப்புக்களான பாலத்தீனிய-யூத உடன்பாட்டை முற்றாக எதிர்க்கும் ஜோர்ஜ் கபாசின் (PFLP= Popular Front for the Liberation of Palestine) அமைப்போடும் (DFLP) எனப்படும் (Democratic Front for the Liberation of Palestine) அமைப்போடும், இசுலாமியவாத அமைப்புக்களோடும் தீவிரமான பேச்சுக்களையும் அரபாத் தரப்பினர் நடத்தினர். எனவே இப்போது ஒருவகை தற்காலிக அமைதி பாலத்தீனியத்தரப்பில் நிலவுகின்றது. ஒரு குறிப்பிட்ட காலவெல்லைக்குள் உடன்பாட்டின் மையமான மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகள் நிறைவேற்றப்படாவிட்டால் உடன்பாட்டிலிருந்து விலகுவதோடு, இசுரேலை ஒரு அரசாக அங்கீகரித்தமையை அரபாத் திரும்பப்பெறவேண்டும் என ஏனையவை கோரியிருப்பதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. எது எப்படி இருந்தபோதும் தற்போதைய சூழலைப் பயன்படுத்த அரபாத் முயன்றாலும் யூதர்கள் இணக்கமொன்றிற்கு வர மறுப்பது எதிர்கால பாலத்தீனிய போராட்டத்தின் போக்கினை தீர்மானிப்பதாக அமையலாம் என்றே கருதப்படுகின்றது.

தொடர்ச்சி மறுபக்கம்

# தீராத சிக்கலாக யூதக் குடியேற்றங்கள்

எவ்வளவுதான் அமைதி, அமைதி என்று உலகம் கூடிநின்று மத்தியகிழக்கைநோக்கிக் கத்தினாலும் கசப்பான அம்மணமான உண்மையொன்று இப்போது வெளிவந்துவிட்டது. அதுதான் இசரேலிய குடியேற்றங்களினது எதிர்காலம் பற்றியது. வளமற்றதும் மிகக் குறைவான இசரேலியக் குடியேற்ற வாசிகளைக் (6000 பேர்) கொண்டதுமான காசாவை பாலத்தீனியர் கையில் ஒப்படைத்த யூதர், வளமானதும் பெருமளவு இசரேலிய குடியேற்றங்கள் உடையதும், யூதரும் பாலத்தீனியரும் அருகருகே வசிப்பதுமான மேற்குக்கரைப் பகுதியிருந்து இராணுவத்தை விலக்கினால் ஏற்படும் விளைவுகள் குறித்து பெரிதும் அஞ்சுகின்றனர். மேற்குக்கரையிலிருந்து இசரேலிய இராணுவம் இடம்மாற்றி நிலை கொள்ளப்படுமானால், யூதர் குடியேற்றங்கள் மீதான தாக்குதல்கள் மிக இலகுவில் மோசமாக மேற்கொள்ளப்படலாம் என முழு இசரேலும் அஞ்சுகின்றது. ஏனெனில், இசரேலியன் வரலாறே இத்திட்டமிட்ட குடியேற்றங்கள்மீதே தங்கியுள்ளது.


1 இலட்சத்திற்கும் மேற்பட்ட யூதக் குடியேற்ற வாசிகளின் எதிர்காலம் இன்று மேற்குக்கரையில் கேள்விக் குறியாகவேயுள்ளது. இசரேலியக்குடியேற்ற வாசிகளின் தொகையில் 70 விழுக்காட்டினர் வசதியும் வளமும் கொண்ட மேற்குக்கரையிலேயுள்ளனர். அதேவேளை, காசாவில் 8 இலட்சத்திற்கும் மேற்குக்கரையில் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட பாலத்தீனிய மக்களும் வாழ்கின்றனர். கடந்த சில ஆண்டுகளாகவே இசரேலிய குடியேற்றங்கள் இப்பகுதிகளில் அதிகரிக்கப்பட்டதும் 1992 ஆம் ஆண்டில் மட்டும் குடியேற்றவாசிகள் தொகை 60 விழுக்காட்டால் அதிகரிக்கப்பட்டதாகவும் தெரிகின்றது.

மொத்தமாகவே ஆக்கிரமிக்கப்பட்ட பாலத்தீனப் பகுதிகளில் இரண்டரை இலட்சத்துக்கு அண்மித்த தொகையில் யூதக் குடியேற்றவாசிகள் இப்போதுள்ளதாகக் கருதப்படுகிறது. அதேவேளை இருதரப்பாலும், தமது தலைநகரமென விடாப்பிடியாகக் கூறப்பட்டு வரும் கிழக்கு யெருசலேமில் யூதக் குடியேற்றம் மிக வேகமாக நிகழ்வதாகத் தெரிகிறது. யூடாயிசம் (Judaism) இஸ்லாம், கிறிஸ்தவம் இம்மூன்று மதங்களில் உயிர் மையமாக யெருசலேம் கருதப்பட்ட போதும், 1967 யூன் 20 ஆம் நாள் ஆறு நாட் போரில் யோர்தானிடம் இருந்து இப்பகுதி கைப்பற்றப்பட்ட பின் 33 விழுக்காட்டிற்கு மேற்பட்ட இப்பகுதி நிலங்கள் யூதரால் பறித்தெடுக்கப்பட்டு விட்டன. 1967 ஆம் ஆண்டும் யூதர் எவருமேயற்ற கிழக்கு யெருசலேமில் 1993 ஆம் ஆண்டில் ஒன்றரை இலட்சம் யூதர் காணப்பட்டனர். இப்போது முற்றாகவே இப் பகுதியின் புவியியல் குடித்தொகையியல் அமைப்பு மாற்றப்பட்டு இப்போது யூதரே இங்கு பெரும்பான்மையாகி விட்டனர். எனவே தான் கிழக்கு யெருசலேமிலும் பாலத்தீனிய தேசிய சபைக்கான தேர்தலில் அங்குள்ள அரபுக்கள் வாக்களிக்கவும் தேர்தலில் பங்குபற்றவும் வசதிகள் அளிக்கப்பட வேண்டும் என்கிற அரபாத்தின் கோரிக்கையையும் ஏற்க, யூதர் தரப்பால் மறுக்கப்படுகின்றது. அதேவேளை உடன்பாட்டின் மிகுதி விதிகளின்படி, தீர்க்கப்படாத பிரச்சினைகளான குடியேற்றங்கள் தொடர்பாக வெளிநாடுகளில் வதியும் பல இலட்சம் பாலத்தீனியர் நாடு திரும்புவது தொடர்பாகவும் இன்னும் ஏனையவை தொடர்பாகவும் பேசப்பட்டு நிரந்தரமான அமைதிப் பேச்சுக்கள் இவ்வாண்டு முடிவுக்குள் தொடக்கப்பட வேண்டும். இறுதியாக நிரந்தமான இறுதி உடன்பாடு 13 ஆம் நாள் டிசம்பர் 1998 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வர வேண்டும். ஆனால் இப்போது உடன்பாடு இடைவழியிலேயே மூச்சைவிடும் கட்டத்திலேயே இன்றுள்ளது.

அதேவேளை அரபாத்தின் எதிர்ப்பாளர் அனைவருமே இச்சிக்கலை எவ்வாறு அவர் தாண்டப் போகிறார் என அவதானத்துடன் அமைதியாக இருந்து கவனிக்க முடிவெடுத்திருப்பதாகவே தெரி கிறது.

இருதரப்பாலும், தமது தலைநகரமென விடாப்பிடியாகக் கூறப்பட்டு வரும் கிழக்கு யெருசலேமில் **யூதக்** குடியேற்றம் மிக வேகமாக நிகழ்வதாகத் தெரிகிறது. **யூடாயிசம்** (Judaism) இஸ்லாம், கிறிஸ்தவம் இம்மூன்று மதங்களில் உயிர் மையமாக யெருசலேம் கருதப்பட்ட போதும், 1967 ஆனி 20 ஆம் நாள் ஆறு நாட் போரில் யோர்தானிடம் இருந்து இப்பகுதி கைப்பற்றப்பட்ட பின் 33 விழுக்காட்டிற்கு மேற்பட்ட இப்பகுதி நிலங்கள் **யூதரால்** பறித்தெடுக்கப்பட்டு விட்டன.

எனவேதான், பேச்சுக்கள் சிக்கலான இக்கட்டான நிலையில் இருப்பதாகக் கூறிக்கொள்ளும் அரபாத்தின் நிலையும் அவ்வாறே உள்ளது. இனிமேல் விட்டுக்கொடுக்க அவரிடம் ஏதுமில்லை. அவ்வாறு மேற்குக்கரை விடயத்தில் விட்டுக் கொடுத்தால், பாலத்தீனிய தாயகத்திற்கு மாபெரும் துரோகம் இழைத்தவராகவே கருதப்படுவார் என்பது, அவருக்கே நன்றாகத் தெரியும்.



# களைத்தவரின் அமைதி

அண்மையில் பரவலாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், கருத்துக்கணிப்புக்கள் யாவுமே யூதரும் பாலத்தீனியரும் அமைதி உடன்பாட்டில் வெகு வேகமாக நம்பிக்கை இழந்து வருவதைத் தெட்டத் தெளிவாக்குகின்றன. இருதரப்பாருக்குமே எதிர்பார்த்தது கிடைக்கவில்லை அதிலும் குறிப்பாகப் பாலத்தீனியரைப் பொறுத்தவரை தொடக்கத்தில் உடன்பாட்டினை ஆதரித்தவர் 69 விழுக்காட்டினர். இப்போதோ 40 விழுக்காட்டினராக இவ் ஆதரவு குறைந்துவிட்டது. யூதர் தரப்பிலே 61 விழுக்காட்டு ஆதரவு 45 விழுக்காட்டளவுக்கு குறைந்து விட்டது. காசாப் பகுதிக்குள் வந்து சேர்ந்து பாலத்தீனிய தன்னாட்சி மன்றினை அரபாத் பொறுப்பெடுத்து இப்போது சரியாக ஓராண்டு முடிந்து விட்டது. ஆனால் காசாப் பகுதியில் எவ்வித பொருண்மிய மேம்பாடும் காணப்படவில்லை. வரண்ட காசா வாழ் பாலத்தீனர் இலட்சத்திற்கும் மேற்பட்டோர் இதுவரை இசரேலுக்குச் சென்றே உழைத்து வந்தனர். இப்போது அத்தொகையை 29 ஆயிரமாக இசரேல் குறைத்துவிட்டது. தொழில் முயற்சிகளற்ற காசாவில் வேலையின்மை 58 விழுக்காடாகவுள்ளது. அண்மையில் இப்பகுதியைச் சுற்றிப் பார்த்த பிபிசி முகவரே, 'இராணுவம் இடமாற்றப்பட்டதால் விளைந்த நன்மையொன்றே கண்ணில் தெரிகின்றது. ஆனால் குடியேற்றவாசிகளைப் பாதுகாக்க காசாவைச் சுற்றிப் படையினர், நிற்பதால் அது திறந்த வெளிச் சிறைச்சாலையாகவே கருதப்பட முடியும். ஏனென்றால் பாலத்தீனிய நிர்வாகிகள், காவல்துறையினர், பொதுமக்கள் அவர் எவராயினும் இசரேலியப் படையினரால் கடுமையாகவும், இழிவான முறையாலும் தடைமுகாம்களில் சோதிக்கப்படுவது பாலத்தீனியரின் தன்மானத்தை பெரிதும் பாதிக்கின்றது' என பிபிசி முகவர் கூறுகின்றார்.

பொருண்மியமும் நடமாட்டமும் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் தன்னாட்சியின் பொருள் என்ன என்றே மக்கள் வினாவெழுப்புகின்றார்கள். எனவே இப்போது இருதலைக்கொள்ளி எறும்பான நிலையில் அரபாத்தும், மரணப்படுக்கையில் ஒப்பந்தமும் என்றே பலரும் கூறுகின்றனர். ஆனால் அடுத்த ஆண்டு தேர்தலைத் தத்தமது நாடுகளில் எதிர்நோக்கும் கிளிங்ரனும் இசரேலிய பிரதமரும் மேற்பூச்சுப் பூசும் வேலையை இன்னமும் கைவிட முடியாத நிலையிலேயேயுள்ளனர். எனவே சிரியாவோடு உடன்பாடொன்றை எட்டவும் சலுகைகள் சிலவற்றைச் செய்து உடன்பாட்டை உயிர்வாழச் செய்யவும் இசரேலுக்கு அழுத்தம் அமெரிக்காவால் கொடுக்கப்படுகின்றது. அடுத்த ஆண்டுத் தேர்தலில் அனேகமாகவே தோல்வியைத் தழுவும் நிலையில் கிளிங்ரனும் றபினும் இருப்பதாகவே தெரிவிக்கப்படுகின்றது. ஏனென்றால் இசரேலின் உடன்பாட்டிற்கு எதிர்ப்பு வலுப்பதால் உடன்பாட்டினை முழுமையாக எதிர்க்கும் எதிர்க் கட்சியான 'லிக்கு விட்' கட்சித் தலைவர் பென்சமின் நேத்தான்யு (Benjamin Netanyahu) விற்கு ஆதரவு மிகவேமாக அதிகரிப்பதாகத் தெரிகின்றது.

எனவே இறுதியாகக் கிடைத்த செய்திகளின்படி, 10 இலட்சம் பாலத்தீனியர் மத்தியில் குடியேற்றப்பட்ட யூதரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக, கெப்ரோன் போன்ற பிரதான நகரங்கள் பிரதான வீதிகள் போன்றவற்றை தமது கட்டுப்பாட்டில் கண்காணிப்பில் வைத்துக் கொண்டு சில நகரங்கள், கிராமங்களிலிருந்தும் தமது படையினரை மீளப்பெற்று வேறிடங்களில் நிலைகொள்ள சம்மதிப்பதாக யூதர் கூறி நிற்கின்றனர். இது ஒரு சுண்டைக்காய் சலுகை. எனவே பின்வரும் இரு கூற்றுக்களை இங்கே குறிப்பிடுவதன் மூலம் இக்கட்டுரை நிறைவடைகின்றது. பாலத்தீனிய நீதியமைச்சரான அபுமிடெயின் கூறுகின்றார். 'இப்போதும் இசரேல் எமது எதிரியே! இன்னமும் அமைதி எமக்கில்லை. அமைதியை அடைவதற்கான சில வழிமுறைகளே இப்போதுள்ளன. இவ்வழி முறைகள் அமைதியை நோக்கியும் போகலாம், போரை நோக்கியும் போகலாம், போரை நோக்கியும் இட்டுச் செல்லலாம்'.



10 இலட்சம் பாலத்தீனியர் மத்தியில் குடியேற்றப்பட்ட யூதரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக, கெப்ரோன் போன்ற பிரதான நகரங்கள் பிரதான வீதிகள் போன்றவற்றை தமது கட்டுப்பாட்டில், கண்காணிப்பில் வைத்துக் கொண்டு சில நகரங்கள், கிராமங்களிலிருந்தும் தமது படையினரை மீளப்பெற்று வேறிடங்களில் நிலைகொள்ள சம்மதிப்பதாக யூதர் கூறி நிற்கின்றனர். இது ஒரு சுண்டைக்காய் சலுகை.

'இப்போது பேசப்படுகின்ற அமைதி என்பது நல்லோருடையதோ, வல்லோருடையதோ அல்லது அறிவாளர்களினதோ அல்ல. இது களைத்துப் போனவர்களின் அமைதி' (It is the Peace of the tired)இசரேலிய எழுத்தாளரின் கூற்று இது.

# தமிழர் விடுதலைப் போராட்டம்

கடந்த சில கிழமைகளுக்கு முன்பு பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர் ஜெனிவா ஐநா. தலைமையகத்தின் முன் குழுமி விடுதலைப் புலிகளுக்கான தங்கள் முழுமையான ஆதரவை வெளிக் காட்டியுள்ளனர். கனடாவிலும் 25,000 தமிழ் மக்கள், சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கு எதிராக வீரமுடன் தாய்மண் காக்கப் போரிடும் தங்கள் சகோதரர்களுடனான தங்களது ஒருங்கிணைப்பைக் காட்டியுள்ளனர். இன்று பிரித்தானியா வாழ் ஆயிரக்கணக்கான புலம்பெயர்ந்தோர் தமிழர் விடுதலைப் போரை முறியடிக்க சிறீலங்கா அரசு கையாளும் இராணுவத் தீர்வுக்குத் தங்கள் எதிர்ப்பைக் காட்டக் கூடியுள்ளனர்.

**இலண்டன் தமிழர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட எழுச்சி மாநாட்டில், இலங்கை நாவாகினியின் முன்னைநாள் தலைவர் திரு வரந்தராஜா அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்**

சிறீலங்கா அரசின் உளவுத்துறையைச் சேர்ந்த யாராவது இங்கிருந்தால், விடுதலைப் புலிகளை மக்களிடமிருந்து பிரிக்கும் முயற்சி தோல்விகண்டுள்ளதென்று- படுதோல்வி கண்டுள்ளதென்று ஜனாதிபதியிடம் எதுவிதத்தடுமாற்றமும் இன்றி எடுத்துக்கூறுங்கள்.

இன்று வெளிப்படையாகத் தெரிவது என்னவென்றால், தமிழ் மக்கள் இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் வாழ்ந்தாலும் தமிழ்த் தேசத்தை சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து விடுவித்து கௌரவமான அமைதிகாண முன்எப்போதையும் விட விடுதலைப் புலிகளின் பின் அணிதிரள்கிறார்கள்-

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னோக்கிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட சிறீலங்கா இராணுவம், தமிழ் மக்களால் ஒரு விடுதலை



இராணுவமாக வரவேற்கப்படுமென்ற மாயையிலிருந்தார்.

ஆனால் உண்மையில் 10,000 துருப்புகள் தற்காலிகமாக சமார் நான்கு தினங்கள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சில பகுதிகளைக் கைப்பற்றியபோது இடம்பெயரக்கூடிய நிலையில் இருந்த எல்லா பெண்களும் ஆண்களும் ஆயிரக்கணக்கில் புலிகளின் பிரதேசங்கட்கு இடம் பெயர்ந்தார்கள். பின்பு புலிகளின் புலிப்பாய்ச்சலுக்கு ஈடுகொடுக்க முடியாது சிறீலங்கா அரசுத் துருப்புகள் தங்கள் பழைய நிலைக்கு திரும்பினர். இந்த ஒரு சில தினக் கைப்பற்றலின் மொத்த விளைவாக இராணுவம் ஒரு புக்காரா யுத்த விமானம், ஒரு ராடர் பொருத்திய சண்டைக்கப்பல், 17 டாங்கிகள் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் ஆகியவற்றை இழந்தது.

இதுபோன்ற ஓர் இராணுவப் பேரழிவை கற்பனை செய்துதான் பார்க்கமுடியுமா? இப்படியான இராணுவ நடவடிக்கை ஒன்றை பின்னோக்கிப்பாய்தல் என்று அழைப்பதே பொருத்தமானதாக அமையும்.

இப்பேரழிவிற்கு இலகுவான விளக்கங் கொடுக்கலாம். தமிழ் மக்கள் தங்கள் மண்ணுக்குள் நுழையும் சிங்கள இராணுவத்தை விடுதலை இராணுவமாக அல்ல ஆக்கிரமிப்பு இராணுவமென்று மிகவும் சரியாக எடைபோட்டார்கள்.

புலிகளின் தலைமைப் பீடத்தை தமிழ் மக்களிடமிருந்து பிரித்து, இராணுவரீதியாக முறியடிக்கும் உபாயம் தோற்றுவிட்டது- தொடர்ந்தும் தோற்கும் என்பதனை, அரசு விரைவில் படிப்பினையால் உணரவெண்டும்.

**புலிகளின் தலைமைப்பீடத்தை தமிழ் மக்களிடமிருந்து பிரித்து, இராணுவ ரீதியாக முறியடிக்கும் உபாயம் தோற்றுவிட்டது... தொடர்ந்தும் தோற்கும் என்பதனை, அரசு விரைவில் படிப்பினையால் உணரவேண்டும்.**

எவ்வாறு எவ். டபுள்யு. டி. கிளாக் தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் தலைமைத்துவம் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்தான் என்று உணர்ந்தாரோ, எவ்வாறு பாலஸ்தீன மக்களின் உண்மைத் தலைமைத்துவம் பாலஸ்தீன விடுதலை இயக்கம்தான் என்று இஸ்ரேல் அரசு இறுதியில் அறிந்துகொண்டதோ அதேபோல் சிங்கள அரசும் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் தமிழ்த்தேசியத்தின் மறுக்கமுடியாத தலைவர்கள் என்பதை உணரவேண்டும்.

**தமிழ்த் தேசியத்தின் உண்மைத் தலைமைத்துவமான விடுதலைப் புலிகளுடன் அரசியல் தீர்வு சம்பந்தமான சமரசப் பேச்சுக்களை சிறீலங்கா ஆரம்பிக்கவேண்டும்.**

**இதை செய்ய கொழும்புத் தமிழ்க் குழுக்கள் சிறீலங்கா அரசை நிர்ப்பந்திக்காவிடில், தமிழீழ விடுதலைப் போரை முறியடிக்க சிறீலங்கா அரசு செய்யும் தந்திரோபாயங்களுக்குத் துணைபோனவர்களாகி விடுவார்கள்.**

இந்தத் தெளிவான உண்மையை ஏற்காது, திட்டமிட்டபடி அதன் யாழ்ப்பாணத் தாக்குதலை கொழும்பு அரசு தொடருமானால் அது இராணுவ பேரழிவுடன் மட்டும் நிற்காது, பாரிய அரசியல், பொருளாதார அழிவுகளையும் சிறீலங்காவுக்கு ஏற்படுத்த வழிசமைக்கும்.

இப்படியான ஓர் ஆக்கிரமிப்பு, சாதாரண தமிழ் மக்களுக்கு எவ்வளவு தூரத்திற்கு துன்பத்தையும் பேரழிவையும் ஏற்படுத்தும் என்பதே எங்களில் அநேகரின் கவலை.

அதனால்த்தான், புலம்பெயர்ந்த தமிழர், சர்வதேச சமூகம், தெற்கிலுள்ள சிங்கள முற்போக்கு சக்திகள் ஆகிய எல்லோரும் தங்கள் சக்தியை பிரயோகித்து இந்த விவேகமற்ற நடவடிக்கையை நடவாது தடுப்பது உண்மையிலேயே முக்கிய பணியாகின்றது. சிறீலங்கா ஐக்கியத் தொழிலாளர் சம்மேளனம் அரசின் யுத்த நடவடிக்கையை ஓர் இனவாத யுத்தமாக கண்டனம் செய்ததுள்ளதை மகிழ்ச்சியுடன் இங்கு தெரிவிக்கிறேன்.

அரசாங்கம் வெளிப்படையாகவே விரைவில் யாழ்ப்பாணம் மீது தொடுக்கவிருக்கும் இராணுவத் தாக்குதலை மறைக்க பயன்படுத்தும் ஓர் அரசியல் தீர்வு தொடர்பாக, அரசுடன் நிபந்தனையற்ற முறையில் கலந்தாலோசிக்க சம்மதம் தெரிவித்ததன்மூலம் கொழும்பிலுள்ள சிறு தமிழ் அரசியல் குழுக்கள் தமிழ் தேசியத்திற்கு மன்னிக்க முடியாதளவு தீங்கு செய்கின்றன.

இக்குழுக்கள் சுதந்திர தமிழ் தேசம், சிங்கள அரசுடன் நடைமுறைக்குகந்த அரசியல் கட்டமைப்புகள் சம்பந்தமாக பேச்சு நடத்துவதில் உண்மையில் அக்கறையுடையவர்களானால் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு இரண்டு விடயங்களை உறுதியாக் கூறவேண்டும்.

1) இராணுவ ஆக்கிரமிப்பை நிறுத்தி சிங்கள ஆயுதப்படையை தமிழர் தாயகத்திலிருந்து விலக்கிக்கொள்ளவேண்டும்.

2) தமிழ்த் தேசியத்தின் உண்மைத் தலைமைத்துவமான விடுதலைப் புலிகளுடன் அரசியல் தீர்வு சம்பந்தமான சமரசப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

இதை செய்யாவிடில் இக்கொழும்புத் தமிழ்க் குழுக்கள் தமிழீழ விடுதலைப் போரை முறியடிக்க சிறீலங்கா அரசு செய்யும் தந்திரோபாயங்களுக்குத் துணைபோனவர்களாகிவிடுவார்கள்.

கொழும்பிலுள்ள இந்த அரசியல்வாதிகள் விழிப்படைந்து,

தொடர்ச்சி 18 ஆம் பக்கம்

# விடைபெறுதல்

ப.நாமகள்

வசந்தி நான்காவது தடவையாக வெளியில் வந்து நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். வீதியில் ஒன்றிரண்டு வாகனங்கள் தான் போய்க்கொண்டிருந்தன. பழகிப் போய்விட்ட மண்ணெண்ணெய்ப் புகை மூக்கை இலேசாகத் தாக்கிற்று. வெயில் பளீரென முகத்திலடித்தது. கையை கண்களுக்கு மேலாக வைத்துக் கொண்டு தொலைவை உற்று நோக்கினாள். புள்ளிகளாய்த் தோன்றிய வாகனங்கள் வர வர அண்மித்து விரை வாய்த் தாண்டிச் சென்றன. அவள் தேடிக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மட்டும் எந்தத் தொலைவிலும் கண்களுக்குத் தென்படவில்லை.

'அக்கா வாறாவா!' பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது.


'இன்னும் காணயில்லை, ரெண்டரைக்கு வாறனெண்டவா'

வசந்தி அமைதியற்றவளாக உள்ளே போனாள். நேரம் மூன்று மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. மேசையின் மேலிருந்த அழைப்பிதழை எடுத்துப் பார்த்தாள். நிகழ்ச்சி நான்கு மணிக்குத் தான் ஆரம்பமாகவிருந்தது. ஆனாலும் முகாமில் சில அலுவல்கள் அவளின் கவனிப்பிற்காகக் காத்திருந்தன. அவள் நேரத்திற்கு வரக்கூடும் என்று தான் வசந்தி எண்ணியிருந்தாள். அநேகமாய் இன்றிரவே அவர்கள் புறப்பட வேண்டியிருக்கும். அவர்கள் எதிர் பார்த்திருக்கின்ற அந்த நாளுக்கு இன்னும் சில நாட்களே இடையில் இருந்தன. நெஞ்சில் இனம் புரியாத ஓர் உணர்வு பரவத் தொடங்கியது. உள்ளே இருக்கப் பிடிக்காமல் வாகலோடு போடப்பட்டிருந்த கதிரைகளில் ஒன்றில் அமர்ந்து கொண்டாள். ஒன்றன் பின்னொன்றாய் சில முகங்கள் ஊடுருவின, மனம் முழுவதும் வியாபித்து நிற்பதாய் உணர்ந்தாள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋

காது மடல்களைக் காற்று வருடிக் கொண்டு சென்றது. இவள் மெதுவாகவும் நிதானமாகவும் தன்னுடைய மோட்டார் சைக்கிளை ஓட்டிக் கொண்டிருந்தாள். வீடு மீண்டும் மீண்டும் ஞாபகத்தைத் தாக்கிற்று.

இனி எப்ப வருவாய் மோனை! அம்மாவின் மெல்லிய குரல் இப்போதும் காதோடு ஒலித்துக் கெண்டிருந்தது. 'லீவு கிடைக்கேக்கை கட்டாயம் வருவேன்' தன்னுடைய பொய்யை அம்மா இத்தனை சுலபமாக நம்பியதை நினைக்கையில் அவளுக்குப் பாவமாக இருந்தது. நிச்சயமாய்த் தான் திரும்பி வரப் போவதில்லையென்பதை அவள் உணர்ந்து தானிருந்தாள். வீட்டின் ஒவ்வொரு அங்குலத்தையும் மனதிற் பதித்துக் கொண்டாயிற்று. முற்றத்து வேப்பமரம், பின் வளவுப் பனை மரங்கள், வடலிகள் எல்லாமே அவள் நினைவுகளை முழுதாய் ஆக்கிரமித்திருந்தன. புதிதாய் ஈன்றிருந்த கன்றுக் குட்டியை தடவிப் பார்த்த மென்மையான ஸ்பரிசத்தின் ஞாபகம் இன்னும் விரல்களிலிருந்தது. அவள் அடுத்த முறை வரும்போது அது இன்னும் நன்றாக வளர்ந்திருக்குமென்றும் அம்மா சொல்லியிருந்தாள். அம்மாவின் கைகளைப் பற்றியபடி விறாந்தையில் சில நிமிடங்கள் அமர்ந்திருந்த போது அம்மா ஏதோவெல்லாம் பேசிக்கொண்டிருந்தாள். இவள் எதுவும் பேசாது விட்டத்தில் படர்ந்திருந்த சிலந்தி வலையையே பார்த்துக் கொண்டிருந்தாள். அம்மா இவளுக்குக் களைப்பென்று நினைத்திருக்கக்கூடும். பாதை குண்டும் குழியுமாக முன்னே நீண்டிருந்தது. இரண்டு பக்கமும் கம்பப் புற்கள் இலேசாய்த் தலைசாய்த்திருந்தன. அப்பால் வெளி பரந்திருந்தது. காற்று ஏதோ ஒரு சத்தத்துடன் வீசியது. அவள் வண்டியை நிறுத்திக் கீழே இறங்கிக் கொண்டாள். முழங்கால் வரை உயரமாயிருந்த புற்களிடையே சில விநாடிகள் நடந்து, நிதானித்து நோக்கினாள். தூரத்து மரங்களுக்கு மேலால் சூரியன் தெரிந்தது. வானத்தில் முகில்கள் ஓடிக்கொண்டிருந்தன. ஆங்காங்கே தேங்கியிருந்த தண்ணீரில் ஒன்றிரண்டு பறவைகள் - அவள் எல்லாவற்றையும் உள்வாங்குவது போல பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பாதைக்கும் அவளுக்குமிடையே வருடக் கணக்கில் உறவு இருந்து வந்திருக்கிறது. அப்பாவுடன் பயணம் செய்த சின்ன வயது நாட்களில் இந்த வெளியும் அதில் வீசுகின்ற காற்றும் அவளைக் கவர்ந்திருக்கின்றன. இரவு நேரங்களில் விரிந்த வானமும் நிறைய நட்சத்திரங்களுமாய் பாதை இன்னமும் அழகாயிருக்கும்.



**அவளுக்குப் பாவமாக இருந்தது. நிச்சயமாய்த் தான் திரும்பி வரப் போவதில்லையென்பதை அவள் உணர்ந்துதானிருந்தாள். வீட்டின் ஒவ்வொரு அங்குலத்தையும் மனதிற் பதித்துக் கொண்டாயிற்று. முற்றத்து வேப்பமரம், பின் வளவுப் பனை மரங்கள், வடலிகள் எல்லாமே அவள் நினைவுகளை முழுதாய் ஆக்கிரமித்திருந்தன. புதிதாய் ஈன்றிருந்த கன்றுக் குட்டியை தடவிப் பார்த்த மென்மையான ஸ்பரிசத்தின் ஞாபகம் இன்னும் விரல்களிலிருந்தது. அவள் அடுத்த முறை வரும்போது அது இன்னும் நன்றாக வளர்ந்திருக்குமென்றும் அம்மா சொல்லியிருந்தாள்.**



திரும்ப வண்டியை நோக்கி நடந்த போது கண்களில் நீர் திரையிட்டது. தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு புறப்பட்டாள்.

தொலைவில் முகாம் தெரிந்த போது

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

# தமிழர் விடுதலைப் போராட்டம்....

**உலகில் சில இடங்களிலே, தேசங்கள் பரஸ்பர நலன்களுக்காக ஒன்றிணைதல் வெற்றிகரமாக பரீட்சிக்கப்பட்டுள்ளதென்பதை நாங்கள் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். ஒருசமயம் சிறீலங்காவையும் தமிழீழத்தையும் கொண்ட கூட்டமைப்பு நடைமுறையில் சாத்தியப்படும் சிறந்த அமைப்பாக அமையக்கூடும். இங்கு கவனிக்கத்தக்க அம்சம் எதுவெனில், ஒரு தேசம் இன்னொரு தேசத்தின் மீது தனது சொந்தத் தீர்வினை வலுக்கட்டாயமாகத் திணிக்க முடியாது. இதைத்தான் இவ்வளவு வருடங்களாக சிங்கள தேசம் தமிழீழத்திற்குச் செய்து வருகிறது.**

புலிகளின் தலைமையின் கீழ் இளைஞர் புரியும் வீரமிகு போரினால்த்தான், கட்டாயத்துக்குள்ளாகி தற்போதைய அரச இப்படியானதொரு தீர்வைத் தர முன்வந்துள்ளதேயன்றி தமிழ் மக்கள் மீதோ அன்றி தமிழ் அரசியல்வாதிகள் மீதோ உள்ள அன்பினால் அல்ல என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து விலகியதனால்த்தான் இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தனது இராணுவ நடவடிக்கைக்குக் காரணம் கூறுகின்றது சிறீலங்கா அரசு. ஆனால் அந்த சமாதானப் பேச்சுவார்த்தை நடக்கும்போது அரசின் பக்கத்தில் இருந்த ஒருவன் என்ற முறையில் நிச்சயமாக ஒளிவு மறைவின்றி என்னால் ஒன்றைக் கூறமுடியும். அதாவது, சமாதானப் பேச்சுவார்த்தையானது, புலிகளை தமிழ் மக்களிடமிருந்து பிரித்து, புலிகளுக்குள்ள மக்கள் ஆதரவைக்குறைத்து இராணுவரீதியாக புலிகளை முறியடிக்கப் போடப்பட்ட இராணுவத்திட்டத்தின் ஒரு பகுதியேயாகும்.

உண்மையில் இந்த மறைமுகக் கபடத்தை உணர்ந்த விடுதலைப் புலிகள் காலம் தாழ்த்தாது விலகிக்கொண்டது மிகவும் சரியானது என்று உறுதியாகக் கூறுவேன்.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சு வார்த்தையை தங்களைப் பலப்படுத்த பயன்படுத்திக் கொண்டார்களென்று சிலர் வாதிடலாம். நான் இதை ஏற்க மறுக்கின்றேன். உண்மை அதுவாகவிருந்தால் விடுதலைப் புலிகள் பொருளாதாரத்தடை நீக்கத்தால் ஏற்பட்ட அனுகூலத்தின் பலாபலன்களை அடையும்வரை அதை இழுத்தடித்திருக்கலாம்.

நிலை அப்படியல்ல, விடுதலைப் புலிகளது உளவுப்பிரிவு அரசின் கபடத்தையும் அதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் எடுத்துகாட்டியிருக்க வேண்டும். எல்லாவற்றையும்விட பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படுமென்ற உணர்வே அவர்கள் விலகப் பிரதான காரணியென்று நான் நம்புகிறேன்.

எனது கணிப்பில் கொழும்புவாழ் சில தமிழர் உட்பட தெற்கில் வாழும் மக்கள் மூன்று விடயங்களை நம்புகிறார்கள்.

முதலாவதாக, பேச்சுவார்த்தையின் முறிவுக்கு விடுதலைப் புலிகளே முழுப்பொறுப்பு. ஆனால் அரசு எடுத்த நடவடிக்கைகளை அறியும் நிலையில் நான் இருந்ததால் இக்குற்றச்சாட்டை நிராகரித்து முழுப்பழியையும் அரசின்மேல் போடுகிறேன்.

இரண்டாவது, விடுதலைப் புலிகள் கண்முடித்தனமான நம்பிக்கை கொண்ட கூட்டம், அவர்களுக்கு வடக்கில் வாழும் தமிழர் மத்தியில் ஆதரவு இல்லை.

அண்மையில் மும்முறை யாழ்ப்பாணம் விஜயம் செய்து சாதாரண மக்களுடன் பரந்தளவில் அளவளாவியவன் என்ற ரீதியில் இந்த ஊகம் முற்று முழுதாகத் தவறானது என்ற உண்மை எனக்குத் தெரியும். புலிகளின் தலைமைப்பீடம் அங்கு அரசு நோக்கிய அரசொன்றை வெற்றிகரமாக அமைத்து போர் சூழல் என்ற போதிலும் கூட சிறந்த முறையில் நிர்வகிப்பது தெரியவந்தது.

தமிழ் மக்கள் புலிகளைத் தங்களது பாதுகாவலர்களாகப் பார்ப்பதோடு மட்டுமன்றி, சிங்கள ஆக்கிரமிப்பு அரசின் பிடியிலிருந்து தங்களை விடுவிக்கும் புலிகளின் வீரத்தையும், உறுதியான வீரமிக்க தலைமைப் பீடத்தையும் மதிக்கின்றார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

மூன்றாவதாக, ஒரு குறுகிய மனப்பான்மையுடைய தத்துவம் கொண்டவர்களடங்கிய விடுதலைப் புலிகள் எந்தவொரு சூழ்நிலையிலும் தனிநாடு தவிர்ந்த எதையுமே ஏற்கமாட்டார்கள் என சிறீலங்காவின் தெற்கிலுள்ள அனேக மக்கள் நினைக்கிறார்கள்.

நான் புலிகளின் பல தலைவர்களுடன் பேசியவன் என்ற முறையில் இப்படியான அபிப்பிராயத்தை ஒட்டு மொத்தமாக நிராகரிக்கின்றேன்.

விடுதலைப் புலிகள் தரும் செய்தி இலகுவானது:- தமிழத் தேசத்தின் சனநாயக உரிமையான சுயநிர்ணய உரிமையானது பேரம்பேசப்பட முடியாதது. ஆனால் தமிழ், சிங்கள மக்களின் நலன்களையும் அபிலாசைகளையும் பேணக்கூடிய ஒரு புதிய அரசகளுக்கான கட்டமைப்பு பேச்சுவார்த்தைக்குள் அடங்கக்கூடியது.

உலகில் சில இடங்களிலே, தேசங்கள் பரஸ்பர நலன்களுக்காக ஒன்றிணைதல் வெற்றிகரமாக பரீட்சிக்கப்பட்டுள்ளதென்பதை நாங்கள் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். ஒருசமயம் சிறீலங்காவையும் தமிழீழத்தையும் கொண்ட கூட்டமைப்பு நடைமுறையில் சாத்தியப்படும் சிறந்த அமைப்பாக அமையக்கூடும்.

இங்கு கவனிக்கத்தக்க அம்சம் எதுவெனில், ஒரு தேசம் இன்னொரு தேசத்தின் மீது தனது சொந்தத் தீர்வினை வலுக்கட்டாயமாகத் திணிக்க முடியாது. இதைத்தான் இவ்வளவு வருடங்களாகச் சிங்களத் தேசம் தமிழீழத்திற்குச் செய்து வருகிறது.

***தமிழ் மக்களின் உறுதியையும், விழ விழ எழும் தன்மையையும் அனுபவத்தில், அதுவும் குறிப்பாக யுத்த சூழ்நிலையில் நேரிற் கண்டுகொண்டவன் என்பதனால், ஆக்கிரமிக்கும் சிறீலங்கா இராணுவத்துக்கு பலமான அடிகொடுக்க, வடபகுதி மக்கள் திடமாக நின்று அவர்களது தலைமைத்துவத்திற்கு உதவுவார்களென்பதில் எனக்கு சந்தேகமே இல்லை.***

***எல்லாத் தமிழ் மக்களினதும் கடமை என்ன வெனில், திடமுடன் புலிகள் தலைமையின் கீழ் அணிதிரண்டு, தமிழர் போராட்டத்தை நசுக்கும் சிறீலங்கா அரசின் முயற்சியை வென்று, அரசை விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள நிர்ப்பந்திக்க வேண்டும்***

ஆகையால் சுய விருப்பத்துடன், சம அந்தஸ்த்துடன் மட்டுமே புதிய அரசகளுக்கான கட்டமைப்பு பேசப்படக்கூடியது. இரண்டு தரப்பினரும் கட்டாயமாக ஒருவரின் சுயநிர்ணய உரிமையை மற்றவர் மதிக்க வேண்டும்.

புலிகளின் தலைமைப்பீடம் இருக்கும்வரை, தன்னிச்சையான ஏமாற்றுத் தீர்வுகள் எதனையும் தமிழ் மக்கள் மீது, சிறீலங்காவால் திணிக்க முடியாதென்பது கொழும்பு அரசுக்கு நன்றாகவே தெரியும். அரசின், இந்தக் கணிப்பாவது மிகவும் சரியானது.

அதனால்த்தான், மற்றைய தமிழ் அரசியல்வாதிகளுடன் ஒப்பந்தஞ் செய்யுமுன் சிறீலங்கா அரசு புலிகளை ஒடுகுவதற்கு முன்னுரிமை கொடுக்கின்றது.

விடுதலைப் புலிகளை வென்றுவிட்டால் மற்றைய உதிரிக் குழுக்களை இலகுவில் கையாளலாம் என்பதும் அவர்களுக்கு சிங்கள அரசிடம் மண்டியிட்டு இரப்பதைத் தவிர வேறெதுவும் செய்யமுடியாது என்பதும் சிங்கள அரசுக்குத் தெரியும்.

விடுதலைப் புலிகள் இருக்கும்வரை, தமிழ் மக்களை தங்களால் ஏமாற்ற முடியாதென்பது அரசுக்கு நன்றாகவே தெரியும்.

அதனால், விடுதலைப் புலிகள் விட்டுக்கொடுக்க விரும்பாத, பிரிவினையில் மட்டும் நம்பிக்கை கொண்டவர்களின் கூட்டமல்லவென்பதை அனைவரும் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.

சிங்கள அரசு இதயசுத்தியோடு, பரஸ்பர நலன்களும் அபிலாசைகளும் உள்ளடங்கிய புதிய அரசுகளின் கட்டமைப்பு சம்பந்தமாய் சம அந்தஸ்துடன் -நாட்டுடன் நாடு போல்- பேசமுற்பட்டால் நிச்சயமாய் புலிகள்தான் பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்வதற்கு முன்னிற்பார்களென்பது எனக்குத் தெரியும்.

ஆனால், சிங்கள அரசு இதயசுத்தியான பேச்சுக்கு இன்னும் தயார் இல்லை என்பதே இதற்குப் பிரதான தடையாகும். இதன் காரணி அவர்களின் மட்டுப்படுத்தப்பட்ட கருத்துகளாகும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், ஜனாதிபதி சந்திரிகாகூட இன்னும் தனது பேரினவாத எச்சங்களிலிருந்து விடுபடவில்லை.

அதனால்த்தான், அவர் யாழ்மீதான இன்னுமொரு தாக்குதலுக்கு முனைகிறார். அதுவும் மக்களுக்கு சொல்லொணா அளவில் பாரிய துன்பங்களை அது ஏற்படுத்தும் என்பதை நன்றாக அறிந்திருக்கும் நிலையிலுங்கூட.

இருப்பினும், தமிழ் மக்களின் உறுதியையும், விழ விழ எழும் தன்மையையும் அனுபவத்தில், அதுவும் குறிப்பாக யுத்த சூழ்நிலையில் நேரிற் கண்டுகொண்டவன் என்பதனால், ஆக்கிரமிக்கும் சிறீலங்கா இராணுவத்துக்கு பலமான அடி கொடுக்க, வடபகுதி மக்கள் திடமாக நின்று அவர்களது தலைமைத்துவத்திற்கு உதவுவார்களென்பதில் எனக்கு சந்தேகமே இல்லை.

அரசு தாக்குதலைத் தொடருமானால் அது மடத்தனமான பெரும் தவறை இழைத்ததாகிவிடும். ஏற்கனவே சிறீலங்காவிலிருந்து அந்நியப்பட்டுள்ள தமிழ் மக்களை அது இன்னும் கூடுதலாய் அந்நியப்படுத்திவிடும். அதன்பின் சமாதானமான ஒரு தீர்வை அடைவது இன்னும் கடினமாகிவிடும்.

ஆகவே எல்லாத் தமிழ் மக்களினதும் கடமை என்ன வெனில், திடமுடன் புலிகள் தலைமையின் கீழ் அணிதிரண்டு, தமிழர் போராட்டத்தை நசுக்கும் சிறீலங்கா அரசின் முயற்சியை வென்று, அரசை விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள நிர்ப்பந்திக்க வேண்டும்.

இன அழிப்பு இராணுவ நடவடிக்கையை கைவிட்டு, தமிழர் தாயகத்திலிருந்து படைகளை முற்றாகத் திருப்பி அழைத்து, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும்படி சிறீலங்கா அரசுக்கு, தெற்கிலுள்ள முற்போக்கு சக்திகள் உட்பட எல்லோரும் இப்போது ஒரே குரலாகக் கூறவேண்டும்.

சிறீலங்கா அரசு இதைச் செய்யத் தவறுமானால், அனைவரும் புலிகளின் தலைமையின்கீழ் அணிதிரண்டு அரசின் யுத்தமுயற்சியை முறியடிக்க வேண்டும்.

வெல்க தமிழரின் விடுதலைப் போராட்டம்!
நீடூழி வாழ்க தமிழீழ விடுதலைப் புலிகள்!!

# டென்மார்க்கில் தியாகி திலீபனின் 8 ஆம் ஆண்டு நினைவுநாள்

'அகிம்சை என்ற மகத்தான வரலாற்றை புதிய இடத்திற்கு நகர்த்திச் சென்றவர் தியாக வேங்கை திலீபன். அகிம்சையைப் பற்றிப் பேச முற்படும்போது, 'தியாகி திலீபனுக்கு முன்னர்', 'அவருக்குப் பின்னர்' என்ற இருநிலைகளிலேயே நோக்குதல் வேண்டும். அகிம்சையின் வரலாற்றின் சடுதியான திருப்பத்தை ஏற்படுத்தியதால் திலீபன் அவர்கள் உலகின் முதல் மனிதராகிறார்'

இவ்வாறு தியாகவேங்கை திலீபனது 8வது நினைவுநாள் டென்மார்க்கிலுள்ள ஈக்காஸ்ற் நகரில் 23.09.95 நாள் நிகழ்வின்போது, இந் நிகழ்வைத் தொடக்கி வைத்துப் பேசிய தமிழீழ விடுதலைப் புலிகளின் டென்மார்க் கிளையின் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. கி. செல்லத்துரை அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

'ஒரு துளி நீரைக்கூட அருந்தாது ஈகம்புரிந்த தியாகி திலீபன் அவர்களின் சாதனை உலகில் முன்னெப்போதும் நிகழ்த்தப்படாத அதி உன்னதமான காரியமாகும். ஆனால் துரதிஸ்டவசமாக உலகப் புகழ் பெற்ற காரியங்களைச் சாதிக்கவல்ல மக்கள் குழு என்ற முதன்மையை தமிழ் மக்களே தமிழ்மக்களுக்கு வழங்கத் தயங்குகின்றார்கள். இந்தத் தாழ்வு மனப்பான்மைப் போக்கானது வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே நம்மீது திட்டமிட்டுத் திணிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தீவின் 2500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை எழுதி வைத்தவர்கள் தமிழர்கள் அல்ல. மகாவம்சத்தையும், சூளவம்சத்தையும் எழுதியவர்கள் சிங்களப் பேரினவாதப் பெளத்த பிக்குகளே. இலங்கைத் தீவின் தமிழர்கள் வரலாற்றையும் எழுதியவர்கள் இவர்களே! எல்லாளன் முதற்கொண்டு சோழப் பேரரசர்கள் வரை அனைத்துத் தமிழர்களுமே தம்மிடம் தோல்வி கண்டதாகவே வரலாற்றைப் புனைந்திருக்கிறார்கள். இந்த வரலாற்று மோசடிகளையே எல்லோருக்கும் பாடப்புத்தகத்தில் இலவசம் என்ற போர்வையில், தமிழினத்தின் எழுச்சியை மழுங்கடிக்கும் நோக்கில் பின்னியிருக்கிறார்கள். இந்தப் பின்னணியில் நாம் வளர்த்துக்கொண்ட தாழ்வு மனப்பான்மையால் நம்மீது நம்பிக்கை கொள்ளத் தயக்கமடைகிறோம். தமிழினம் வெற்றிபெற்ற இனம் என்பது தமிழீழத்தில் நிரூபிக்கப்பட்ட பின்னரும், அதை நம்புவதற்கு நம்மில் சிலர் இன்னும் தயக்கமடைவதற்குக் காரணம் இதுவே!

ஜே.ஆர் என்ற சிங்களப் பேரினவாதி தன்னுடைய காலத்தில் நிகழ்த்திய உரைகளைத் தொகுத்து நோக்கினால் அதில் 90 விழுக்காடு அகிம்சையே பேசப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். ஆனால் அவருடைய ஆட்சியில் நடந்ததையும் அறிவீர்கள். இந்திய படையின் தமிழீழத்தின் மீதான ஆக்கிரமிப்புக்கும் இவரின் ஆட்சியே காரணமாயிற்று. அகிம்சாவாதியான மகாத்மா காந்தியும் வன்முறை மூலமே இந்திய மண்ணில் கொல்லப்பட்டார்.

இந்த வரலாற்றுப் பாடத்தின் அடிப்படை உண்மை அகிம்சையை இவர்கள் ஆக்கிரமிப்பை மறைக்கும் கேடயமாகவே பயன்படுத்தினார்கள். இவர்கள் அகிம்சையை ஆத்மத்திற்குள் எடுத்துச் செல்லவில்லை. ஆனால் அகிம்சை என்கிற தூய விடயத்தை ஆத்மத்திற்குள் எடுத்துச் சென்றவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளே. ஆயுதத்தைக் கையில் ஏந்திய பின்னரும் உண்ணா நோன்பிருந்து பசி கிடந்தவன் தியாகி திலீபன். தமிழீழ தேசியத் தலைவரின் வழிகாட்டலில் ஒவ்வொரு விடுதலைப் புலியும் அகிம்சையை ஆன்மீகத்தில் வைத்துக்கொண்டே களமாடி வருகிறார்கள். தன்னுடைய இனம் அழிக்கப்படுவதைப் பொறுக்க முடியாது, தமது விலை மதிப்பற்ற இன்னுயிரையே முன்வந்து ஈகம் செய்யும் ஒவ்வொரு விடுதலைப் புலிவீரனும் ஆன்மீகத் துறவிகளே. அகிம்சை வாதிகளே. இந்த தன்னலமற்ற தூய அகிம்சையின் அடுத்த வரலாற்றைத் தொடக்கி வைத்த பெருமையைப் பெறுகிறார் தியாகி திலீபன்.

இன்று பொல்கொட வாவியில் தமிழ் மக்களின் சடலங்களுக்கு அருகில் இருந்தும் சிலர் அகிம்சை பேசிவருவதைக் கேட்கிறோம். தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்ட எல்லாக் கலவர காலங்களிலும் இவர்கள் அகிம்சை பேசினார்கள். இவர்களின் அகிம்சையை சிங்கள, இந்திய அரசுகள் ஆதரித்தன. ஆனால் இவ்அரசுகள் திலீபனின் உண்ணாநோன்பினை மட்டும் எதிர்த்தன. ஏன்? இந்த இடத்தில்தான் தியாகி திலீபன் கடைப்பிடித்த அகிம்சை வேறு, மற்றவர்கள் பேசியது வேறு என்ற உண்மையை நாம் அறிந்து கொண்டோம்.

தமது இனமக்கள், உடன்பிறப்புக்கள் கொன்றொழிக்கப்படுகின்றபோது அதைத் தடுக்க உயிர்கொடுத்துப் போராடுவது அகிம்சை. அந்த நேரம் அகிம்சை எனப்பேசுவதுதான் மானிடத்தின் மீது நிகழ்த்தப்படும் மாபெரும் இம்சை ஆகும். தமிழர்களாகிய நாம் இந்த வேறுபாடுகளைத் துய்த்துணர வேண்டும். நாம் வெற்றி பெற்ற இனம். தமிழீழம் உண்மை என்ற உறுதியோடு ஒவ்வொரு தமிழ் மகனும் தாம் வீரப்புலிகளின் ஈழத்தமிழர் என்ற உறுதியோடு தமிழீழம் மலரப் பாடுபட வேண்டியது நமது வரலாற்றுக் கடமையெனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் 'யார்பொறுப்பு?' எனும் நாடகமும், தமிழீழ இசைக் குழுவினரால் 'யாகராகங்கள்' இசை நிகழ்ச்சியும், பரதநாட்டியம், கவிதா நிகழ்வு ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. பெருந்தொகையான தமிழீழ மக்கள் கலந்து கொண்டு தியாகி திலீபனை நினைவு கூர்ந்தனர்.

# யேர்மனியில் தியாகி திலீபனின் 8 வது ஆண்டு நினைவுநாள்

'இலட்சியத்திற்காக, திலீபன் தன்னை உருக்கி மூட்டிய புரட்சித்தீயில் தமிழீழமக்கள் திரண்டெழுந்தனர், திலீபனின் தியாகம் தமிழீழம் எங்கும் புயலெனப் பரவியது, எமது போராட்டமும் புதிய பரிமாணத்தைப் பெற்றது'

இவ்வாறு யேர்மனியில் அண்மையில் நடைபெற்ற தியாகி திலீபனின் எட்டாவது நினைவு நாள் நிகழ்வில் சிறப்புரை நிகழ்த்தும் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் யேர்மனிப் பிரதிநிதி திரு. சிவநேசன் தெரிவித்தார்.

எசன் நகரில் அமைந்துள்ள பல்கலைக்கழக மண்டபத்தில் 16.09.95 சனிக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

'நமது தூய போராட்டம், எத்தனையோ காட்டிக் கொடுப்புக்கள், கபடநாடகங்கள், துரோகிகளின் குழிபறிப்புக்கள் நிறைந்த பகையை முறியடித்து நிற்கிறது. சிறீலங்காவின் ஆட்சிப்பீடத்தில் யார் ஆளுமையைப் பெறுகின்றார்களோ, அத்தனைபேரும் தமிழ்மக்களின் குருதியில் குளிக்கவிரும்பும் பச்சை இனவாதிகள்தான். இந்திய அரச இரகசியமாக, இனவாத சிங்கள அரசுக்கு ஆயுத உதவி வழங்குகின்றது. எமது தலைவர் மீது குறிவைத்துச் செயற்படுகின்றது. முப்பதாயிரம், நாற்பதாயிரம் பேர் கொண்ட இராணுவ நடவடிக்கை எமது மக்களின் மீது மேற்கொள்ள ஏற்பாடுகள் நடக்கின்றன.

இவற்றையெல்லாம் தலைவரின் நேரடி வழிகாட்டலில் புலிப் போராளிகள் முறியடித்து உயிர்த்தியாகம் செய்து போராடி வருகின்றனர். தமிழீழத்தில் அனைத்து மக்களையும் அணிதிரண்டு எதிரியை எதிர்த்துப் போராட அறைகூவல் விடப்பட்டுள்ளது. பொருண்மிய வசதியுள்ளவர்களிடம் இந்த நெருக்கடியான நேரத்தில் பணஉதவிகளும் கோரப்படுகின்றது. இது ஒரு அத்தியாவசிய காலகட்டம். நமது உதவிகள் தேவைப்படும் உச்ச நேரம். நாமும் அவசரகால நிதி சேகரிப்பில் இறங்கிவிட்டோம். எல்லோரும் ஒன்றிணைந்து நிலை உணர்ந்து பங்களித்து, தமிழீழத்தை வென்றெடுக்க முழுமனதுடன் இந்த விடுதலை அமைப்பின் கரங்களை வலுப்படுத்தும்படி வேண்டுகிறோம்' என்றார்.

ஆயிரத்துக்கும் அதிகமானோர் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்ட இந்நிகழ்வில், தமிழீழவிடுதலைப் புலிகளின் யேர்மனிப் பிரதிநிதி திரு. சிவநேசன் அவர்கள் மங்கள விளக்கேற்றி, நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தார்.

தொடர்ந்து திலீபன் நினைவுநாள் போட்டிகளும் நடைபெற்றன. இதில் 200க்கும் அதிகமான போட்டியாளர்கள் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிக்கொணர்ந்தனர். முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டவர்களின் பேச்சுக்களும் கவிதைகளும் மேடையேற்றப்பட்டது.

'விடுதலை இலக்கு', 'அறமும் வீரமும் வெல்லும்' ஆகிய இரு நாட்டியத் தொகுப்புக்களும் 'சந்திரிகா புராணம்' என்ற கதாப்பிரசங்கமும் நிகழ்ச்சியைச் சிறப்பூட்டின. தொடர்ந்து திரு. கண்ணனின் கர்நாடக சங்கீத கச்சேரி, விடுதலை உணர்வுடைய பாடல்களை உள்ளடக்கியதாக 'திலீபராகம்' எனும் தலைப்புடன், தமிழர் உள்ளங்களை நிறைத்த ஒரு இசைநேரமாக அமைந்தது.


அறிவிப்பாளர் திரு. வலன்ரைன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால்
போசாக்கு புனர்வாழ்வு நிலைய நிதிக்காக
28.09.95 அன்று நடத்தப்பட்ட
அதிஸ்டலாபச் சீட்டு முடிவுகள்

① ஆம் பரிசிற்குரிய இலக்கம் : 1944
② ஆம் பரிசிற்குரிய இலக்கம் : 3194
③ ஆம் பரிசிற்குரிய இலக்கம் : 7939

பத்து ஆறுதல் பரிசில்களுக்குரிய இலக்கங்கள் :
1673, 1759, 937, 7540, 4023
5021, 6426, 8156
7545, 1360

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - நோர்வே
T.R.O, Post Boks 4742 ,Sofienberg,
0506 Oslo,Norway

பாரிஸ் அகன்ற வெண்திரையில்
இரு தமிழீழத் திரைப் படங்கள்
உயிர்ப்பூ
மீண்டும் அனேகரின் வேண்டுகோளிற்கிணங்க
உறங்காத கண்மணிகள்

காலம் : 29 - 10 - 1995
நேரம் : மாலை 6.30 மணி. 9 மணி
(இரு காட்சிகள்)
இடம் : LE TRIANON
80, B.D Rocheihouart, 75018 PARIS
Metro - Anveys
நுழைவுச் சீட்டுக்களை "லூன்" ஸ்தாபனத்திலும் மண்டப வாயிலிலும் பெற்றுக்கொள்ளலாம்.
☎ தொடர்புகட்கு :- 43 58 1142

# தமிழீழத்தை அங்கீகரிக்கக் கோரியும் சிறீலங்கா அரசின் தமிழினப் படுகொலையைக் கண்டித்தும்

## ஐரோப்பிய பாராளுமன்ற முன்றலில்

# மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி





23-10-95 - சந்திரிகாவின் இன அழிப்பு நடவடிக்கையை எதிர்த்து வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கும், நவாலி, நாகர்கோவில் எனப் பலவாறு மரணித்த பொதுமக்களுக்கும் அஞ்சலி செலுத்தும் நாளாகப் பிரகடனம்.

## உலகத் தமிழினமே! நாம் இன்னும் தூங்கலாமா?

**காலம்:** 23-10-95 **நேரம்:** பிற்பகல் 2.00 மணி

**இடம்:** ஐரோப்பிய பாராளுமன்ற முன்றல் - Strasbourg, France

## பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்களே!

இந்த மாபெரும் பேரணியில் கலந்துகொள்வதற்காக Paris-ல் இருந்து Strasbourg நோக்கி எமது ஒன்றுபட்ட உணர்வுகளைச் சுமந்து செல்ல விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. உடனடியாகவே உங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

### தொடர்புகளுக்கு:

| பிரான்ஸ் | ஜேர்மனி | சுவிஸ் | இங்கிலாந்து | நெதர்லாந்து | இத்தாலி | டென்மார்க் | நோர்வே |
|---|---|---|---|---|---|---|---|
| T.C.C. | T.C.G. | W.T.C.C. | U.T.O. | T.C.C. | T.C.C. | L.T.T.E. | T.C.C. |
| Tel: 43 58 11 42 | Tel: 021-6651309 | Tel: 01/273-29-38 | Tel: 0181-503 4294 | Tel: 070-346 1963 | Tel: 091-611 3179 | Tel: 97-155299 | Tel: 022-191260 |

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

Printed by Observer Group Newspapers.